Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–05 | 19–06–2004 | சனிக்கிழமை | ஓசை –122

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

T.P: 024-222 4247
077-6059672
(சி-9598)



# 114 பாராளு.உறுப்பினர்கள் கையொப்பத்துடன்

# சனநாயகத்தை நிலைநிறுத்தக்கோரும் கடிதம்!

## சபாநாயகரிடம் ஒப்படைக்க முடிவு

**பாராளுமன்றத்தில் சனநாயகத்தை நிலை நாட்டவேண்டுமெனக் கோரி எதிர்க்கட்சிகள் 114 கையொப்பங்களை எதிர்வரும் திங்கட் கிழமை சபாநாயகரிடம் கையளிக்கவுள்ளன. கடந்தபாராளுமன்ற அமர்வின்போது ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டது தொடர்பாகவும் பாராளுமன்றத்தில் சிறியகட்சிகள் தமது கருத்தைக் கூற சந்தர்ப்பம் வழங்க ஆளும்கட்சியினர் இடையூறாக இருப்பதற்கு எதிராகவும் இக்கையொப்பங்கள் பெறப்பட்டன.**

இதில் தற்போது 114 பேர் கையொப்பமிட்டுள்ளபோதிலும் ஏற்கனவே தமிழரசுக் கட்சியுடன் சனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தையின் போது தன்னாட்சி அதிகாரசபை வழங்கப்படுமென சனாதிபதி கூறியதால் அதற்கமைய தமிழரசுக்கட்சி சிலவேளை எதிர்க்கட்சியுடன் சேர்ந்து இயங்காமல் போகலாம் என்கின்ற ஓர் எதிர்பார்ப்பு அரசிடமும் இருந்தது அதேபோல் எதிர்க்கட்சியிடமும் இருந்தது நேற்று முன்தினம் மங்கள சமரவீர சனாதிபதி தமிழரசுக் கட்சியிடம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக கலந்துரையாடவில்லையெனக் கூறிய பின்னர் எதிர்க்கட்சியின வலிமை கூடியுள்ளது அதாவது தமிழரசுக் கட்சி எதிர்க்கட்சியுடன் சேரும் என்கிற எதிர்பார்ப்பு இருப்பதால் உடனடியாக இம் மகஜ‌ை கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. (32)

## -மட்டு சம்மாந்துறையில்-

# இரு தமிழ்ச்சிறுமிகள் மீது 3 முஸ்லிம்கள் பாலியல் வல்லுறவு

மட்டக்களப்பு சம்மாந்துறைப் பகுதியில் இரண்டு தமிழ்ச்சிறுமிகள் மூன்று முஸ்லிம்களால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தின் போது 14,15 வயதுடைய சிறுமிகளே பாலியல் வல்லுறவிற்கு உள்ளானவர்களாவர். இவர்கள் தமது பாட்டியுடன் சம்மாந்துறை பிரதான வீதியில் நின்ற போது அப்பகுதியால் முச்சக்கர வண்டியில் வந்த மூன்று முஸ்லிம்கள் தங்களது வயலில் களை பிடுங்க வருமாறு இவர்களை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

பின்னர் பாட்டியை இடைநடுவில் இறக்கிவிட்டு வயல் பகுதியில் உள்ள மலைப்பாங்கான இடத்திற்கு இரண்டு சிறுமிகளையும் இழுத்துச்சென்று கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திவிட்டு தலைமறைவாகி விட்டனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய– பிரி.வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கை நெருக்கடி குறித்து ஆராய்வு

இலங்கையின் அரசியல நெருக்கடி குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ் றோவுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் முதற் தடவையாக ஐரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் நட்வர்சிங், கடந்த புதன்கிழமை ஜக்ஸ்றோவை இலண்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கையின் அரசியல் நெருக்கடி உட்பட அயல் நாடுகளான நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் நடைபெற்றுவரும் நிகழ்வுகள் குறித்தும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சருடன் விரிவான ஆலோசனை நடத்தியதாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் இரு விவசாயிகள் தேசவிரோதிகளின் தாக்குதலில் பலி

(மட்டக்களப்பு)

ஏறாவூர்பற்றுப் பிரதேசத்தில் நவிண்ணிய மடுவில் பண்ணையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த இரண்டு விவசாயத் தொழிலாளிகள் தேசவிரோதிகளின் கிரனேட்வீச்சிற்கு இலக்காகி பரிதாபகரமாகப் பலியாகியுள்ளனர்.நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற இச்சம்பவத்தின்போது கிரா ன்குளத்தைச் சேர்ந்த கந்தக்குட்டி மயில்வாகனம், இராசபுரம் மரப்பாலத்தைச் சேர்ந்த தேவமணி குட்டிக்கண்ணன் என்ற இரண்டு பேருமே பலியானவர்களாவர். அப்பாவிப்பொது மக்கள் மீது அரச கைக்கூலிகளான இந்தத் தேசத்துரோகிகளின் மிலேச்சத்தனமான செயலானது சமாதானத்தைச் சீர்குலைக் கும் செயலென பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் சந்திரிகாவைச் சந்திக்கத் திட்டம்

நோர்வேயின் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் விதார் ஹெல்கேசன் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று இந்தியாவுக்கு செல்லவுள்ள விதார் ஹெல்கேசன் அதற்கு முன்னர்,தற்சமயம் பிரித் தானியாவில் தங்கியுள்ள சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்திப்பார் என்றே எதிர்பார்க்கப்ப

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு நாளை காலை கிளிநொச்சி நகரில் ஆர்ப்பாட்டப்பேரணி இடம்பெறவுள்ளது.

இதனைத் தேசிய எழுச்சிப்பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர். ஒரு தசாப்தத்திற்கு மேலாக மக்கள் இடம்பெயர்ந்து அகதிகள் என்னும் பெயருடன் அல்லலுற்று அலைந்து திரிய அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை நிறுத்துவது குறித்து அரசாங்கம் ஆராய்கிறது. அவர்களது சொந்தநிலங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்னும் போர்வையில் ஆக்கிரமித்து அவர்களை மீளக்குடியமரவிடாது தடுத்துள்ளது.

தமிழ் மக்களின் பிரதேசங்களில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போதும் இயல்புநிலை தோன்ற சிறிலங்காப்படையும் அரசாங்கமும் தடையாகவுள்ளன. கிழக்கில் போராளிகளினதும் கல்விமான்களினதும்,தேசியப்பற்றாளரதும் படுகொலைகளும் மலையக மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களும் கடலில் தொழிலாளர்கள் மீதான தாக்குதலகளும் கண்டனத்துக் குரியவை இவற்றுக்குக் கண்டனம் தெரிவித்தும் எமது பாரம்பரிய பிரதேசத்தில் எமது பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்படுகின்ற தன்னாட்சி

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவிலிருந்து அகதிகள் வந்த வள்ளம் ஒன்று கடலில் மூழ்கியது?

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கை அகதிகளை ஏற்றி வந்த வள்ளம் ஒன்று மன்னார் கடற்பரப்பில் மூழ்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், சுமார் 12 பேருடன் இராமேஸ்வரத்தில் இருந்து தலை மன்னார் நோக்கி மூன்று நாட்களுக்கு முன்னர் பயணத்தை ஆரம்பித்த வள்ளமே மூழ்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்

யுனிசெவ் வெண்புறா – வன்னி

(சி-9728)

## காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்

# பணிநிலை வேண்டுகை

பணிநிலை - [01] விடுதிப்பராமரிப்பாளர் - ஆண்

(Hostael Warden)

தகைமை க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி

பணிநிலை - [02] - சாரதி

பணிநிலை - [03] - வீட்டு மின்சுற்றாளர்

பணிநிலை - [04] - இயந்திரப் பராமரிப்பாளர்

தகுதியுடையோர் நேரில் தொடர்பு கொள்ளவும்

குறிப்பு:-25.06.2004ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு கைவேலி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள காந்தரூபன் அறிவுச்சோலையில் நடைபெறவுள்ளதால் சகல தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை.

(4720)



# இயல விற்பனை

உந்துருளிகள் இயங்கும் நிலை / உதிரிகளாக்கும் நிலை ஈருருளிகள் இயங்கும் நிலை பார்வையிடும் காலம் 17-06-2004, 18-06-2004, 19-06-2004.

☐ இயலம் நடைபெறும் நாள்: 20-06-2004
காலை 10.00 மணி

☐ இடம் : உடைமைப் பகுதிச் செயலகம்
வேணாவில், புதுக்குடியிருப்பு.

உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம்
200 ரூபா

(4651)



# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்க்காட்டப்படும் மாதங்களில் நிவாரணவிநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான கோதுமை மாவினை (பிறீமா கிறின் பிராண்ட்) வழங்கக் கூடிய இம்மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| விநியோகிக்கப்படவேண்டிய காலம் | விநியோகிக்கப்படவேண்டிய தொகை |
|---|---|
| யூலை 2004 | 250 மெ.தொன். |
| ஆகஸ்ட் 2004 | 250 மெ.தொன். |
| செப்ரெம்பர் 2004 | 250 மெ.தொன். |

இதற்கான கேள்விப்படிவங்களையும்.மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2004.06.28 ஆந் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

(திருமதி இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-9129)



# சாவு அறிவித்தல்

பிறப்பு 21 - 05 - 1923



இறப்பு 16 - 06 - 2004

## சின்னப்பு - அருனாசலம் (போசர்)

2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு அருனாசலம் என்பவர் 2004.06.16அன்று காலமானார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புதுக் குடியிருப்பு இந்து மயானத்தில் 2004.06.20 (ஞாயிறு) 10.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார் உறவினர்களுக்கு அறியத்தரு கின்றோம்.

தகவல்
மனைவி

(4719)



## வரிவிளம்பரம்

### கதிர் [அமல்] பல் மூக்குக் கண்ணாடியகம்

கண்பரிசோதித்துப் பொருத்தமான பிறேம்களில் உடன் கண்ணாடிகளைச் செய்து பெற்றுக் கொள்ள பல்கட்டுதல் கிளிப்போடு தல் என பன உடன்செய்து கொள்ள ஏ-9 வீதி அரச அதிபர் இல்லம் முன்பாக கிளிநொச்சி. கிளை பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு. (4718)


## மிகமோசமான வீதி

நீண்டகாலமாக வங்காலையிலிருந்து நானாட்டான் செல்லும் வீதி மிக மோசமாக உள்ளது. இப்பாதையால் விவசாயிகள், வியாபாரிகள், ஊழியர்கள் சென்று வருகின்றனர்.1990ஆம் ஆண்டில் இருந்து இந்தப் பாதை திருத்தப்படவில்லை. முன்னர் இந்தப் பாதை கல்போட்டு தார் போட்ட வீதியாக இருந்த போதும் தற்சமயம் கிறவல் பாதையாக காணப்படுகிறது. (மி)

## கிளி. தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள்,இலக்கியத் தேர்வு

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தால் ஆண்டு தோறும் கிளி.மாவட்ட பாடசாலைகளுக் கிடையில் நடாத்தப்பெறும் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் தேர்வு எதிர்வரும் 27ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

கிளி.மாவட்டத்தில் 35 பாடசாலைகளில் மேற்படி தேர்வுகள் இடம் பெறவுள்ளதெனவும் இதற்கான நுழைவு அட்டைகள் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பிவைகப்பெற்றுள்ளதெனவும் நுழைவு அட்டைகள் கிடைக்கத் தவறியவர்கள் கிளிநொச்சி தமிழ்ச்சங்க செயலர் வே.பரமநாதப்பிள்ளையுடன்தொடர்புகொள்ளும்வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (சோ,கு)

## பழமரக்கன்றுகள் வழங்கல்

சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக கண்டாவளை பிரதேச த.பொ.மே.நி குமாரசாமிபுரம் கிராமத்தில் பழமரக்கன்றுகள் வழங்கியுள்ளனர். மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் கிராமத்திலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் பிரதேச இணைப்பாளர் காசிநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சூழல் பாதுகாப்புத் தொடர்பான கரத்துரைகளும்,சூழல் பாதுகாப்புத் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன இந்நிகழ்வில் பலா, முந்திரிகை, மலைவேம்பு,இலுப்பை என்பன வழங்கி நாட்டப்பட்டன. (14)

## நிர்வாகிகள் தெரிவு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்க நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு கடந்த 14ஆம் திகதியன்று கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படித் தெரிவு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தனும் சிறப்பு விருந்தினர்களாக கிளி.பிரதேசப் பொறுப்பாளர் நிரூபன், கிளி. மாவட்ட நிர்வாகசேவை நிர்வாக அலுவலர் ராம்கீ, கிராமசேவை அலுவலர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவில் கலந்துகொண்டனர்.

மேற்படித் தெரிவில் தலைவராக அ.கனகரத்தினம், செயலாளர் ச.கோமேதகன் பொருளாளராக கு.தில்லையம்பலம், துணைத்தலைவராக பொ.பஞ்சாட்சரசிவம், துணைச்செயலாளராக ம.நந்தகுமார் ஆகியோரும் 9 நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)


# ஆசிரியர் போட்டிப்பரீட்சை

வழிகாட்டல் வகுப்பு 20.06.2004.

இடம்-கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

காலம்-20.06.2004 ஞாயிறு காலை 9.00மணி

செயலாளர்,
பேரிகை சமூக கலை இலக்கிய,
பங்காளிகள் அமைப்பு,
கிளிநொச்சி.

(4611)



# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்க்காட்டப்படும் மாதங்களில் நிவாரணவிநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான புழுங்கல் (சிவப்புநாடு) அரிசியினை வழங்கக் கூடிய இம்மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| விநியோகிக்கப்படவேண்டிய காலம் | விநியோகிக்கப்படவேண்டிய தொகை |
|---|---|
| யூலை 2004 | 350 மெ.தொன். |
| ஆகஸ்ட் 2004 | 350 மெ.தொன். |
| செப்ரெம்பர் 2004 | 350 மெ.தொன். |

இதற்கான கேள்விப்படிவங்களையும்.மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2004.06.28 ஆந் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

(திருமதி இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-9130)



# இரங்கற் செய்தி

## திரு.சுப்பிரமணியம் செல்வரத்தினம்

முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிமனை கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சுப்பிரமணியம் செல்வரத்தினம் அவர்களின் பாசமிகு தந்தையார் அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் இறைபதமெய்தியமையைக் கேள்வியுற்று ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
குடும்பத்தினரின் துயரில் முல்லை வலயக்கல்விப்பணிமனை கல்விப்பணிப்பாளர் , மற்றும் உத்தியோகத்தர்கள் பங்குகொண்டு ஆறுதலைப் பகிர்கின்றோம்.

வலயக்கல்விப்பணிமனை
முல்லைத்தீவு (சி-9131)

வலயக் கல்விப்பணிப்பாளரும்
உத்தியோகத்தர்களும்



# சாவு அறிவித்தல்



## செல்லப்பா மகேந்திரன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரம் இல.18ஜ நிரந்தர வசிப்பிடமாகவும், ஆனந்தநகர் இல.23 கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும், கொண்ட அன்பு வெதுப்பக உரிமையாளருமான செல்லப்பா மகேந்திரன் என்பவர் 18.06.2004 வெள்ளி அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும், சோதிமணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இராமநாதன் நாகமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும், வசந்தகுமார், பிறேம்குமார்.(அன்பு), ஜெயவாணி ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலச்சந்திரன் (முட்கொம்பன்) அ.த.க பாடசாலை ஆசிரியரின் மாமனாரும், துஷாந்தனின் அன்புப்பேரனும், பாலச்சந்திரன், மகேஸ்வரி, மலர், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்தையா (ஸ்கந்தபுரம்), பேரம்பலம் (புதுமுறிப்பு), மகேசபிள்ளை (ஜேர்மன்), கமலம் (ஸ்கந்தபுரம்), புவனேஸ்வரி (பிரான்ஸ்), தனலட்சுமி (ஸ்கந்தபுரம்), சுதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.அன்னாரது ஈமக்கிரியைகள் 19.06.2004 இன்று 3.00மணிக்கு ஸ்கந்தபுரம் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஸ்கந்தபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
அன்பு வெதுப்பகம்.

(4610)

# ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைமையை யாரிடம் வழங்குவதென்பதில் முடிவில்லை

### தீர்மானமெடுப்பது பிற்போடப்பட்டது

**ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் தமது தலைமைப்பீடமான ஐரோப்பிய ஆணைக்குழுவை வழிநடத்த வேண்டியவர் யார் என்பது பற்றி இணக்கம் காணத்தவறியுள்ளனர். பெல்ஜியத்தில் ஒன்று கூடியிருந்த ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் இது தொடர்பான தீர்மானத்தினைப் பிற்போட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பிற்கு 8 அல்லது 9 பேர்வரை பிரேரிக்கப் பட்டிருக்கிறார்கள் ஆனால் ஒரு வருக்காவது அறுதிப் பெரும் பான்மை கிடைக்கவில்லை என்று தற்போதைய ஐரோப்பிய ஆணைக் குழுவின் தலைவரான அயர்லாந் துப் பிரதமர் றொமோனோ ரோடி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவரைத் தெரிவு செய்வது தொடர்பில் பிரிட்டனும் ஜேர்மனியும் தொடர்ந்து முரண்பட்ட நிலையில் இருந்து வரு கின்றன. ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கு தலைவரொருவரை தெரிவு செய்வ தற்கு முயற்சிக்கப்பட்ட போதும் மேற்படி இரு நாடுகளும் இணைக்க மொன்றுக்கு வரவில்லை.

பல்கேரியப் பிரதமர் கய் வேகொ.்.ப் ஸ்ராட்டை ஆணைக் குழுவின் தலைவராக்குவதற்கு ஜேர்மனி ஆதரவளித்து வருகின் றது. பிரான்சும் இதற்கு ஆதரவை அளிக்க முன்வந்துள்ளது.

இதனைக் கடுமையாகப் பிரிட் டன் எதிர்த்துள்ளது. ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவராக லக்ஸம் பேர்க் பிரதமர் ஜுன் கிளோடி ஜங்கர் தெரிவு செய்யப் படுவதை ஒன்றியத் தலைவர்கள் அனேகர் விரும்புகின்ற போதிலும் அப்பதவியை ஏற்க ஜங்கர் மறுப் புத் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களில் நம்பிக்கையிழந்த மக்கள் கடந்த வாரம் ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல்களில் பெருமளவு வாக்களிக்காது விட்டி ருந்த நிலையில் தற்போது ஐரோப் பிய ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பது தொடர்பான இழுபறி அவர்களது நம்பிக்கையீனத்தை மேலும் அதிகரிக்குமெனத் தெரிவிக் கப்படுகின்றது.

## எச்சரிக்கை

(தெஹ்ரான்)

ஈரானுக்கு எதிராகக் கடுமை யான வாசகங்களைக் கொண்ட தீர்மானத்தை சர்வதேச அணுசக்தி அமைப்பு நிறைவேற்றினால் யுரேனியம் செறிவூட்டும் பணிகளை மீள ஆரம்பிக்கப்போவதாக ஈராக் எச்சரிக்கை செய்துள்ளது.



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு மையத்தில் கார்க்குண்டு வெடிப்பின்போது கொல்லப்பட்ட ஒருவரின் உடற்பாகங்களை ஆய்வுசெய்யும் ஈராக்கிய மருத்துவ ஆய்வாளர்.




கைலோங் ஜியன் மாகாணத்தில் கைகாரில் அமைந்துள்ள தெளசாங் கிராமத்தில் இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பானியத் துருப்புக்களால் பாவிக்கப்பட்டு கைவிடப்பட்ட இரசாயன ஆயுதங்களை ஜப்பானிய வல்லுனர்கள் புதைப்பதற்குத் தயார்ப்படுத்தியுள்ளனர்.

# அணுவாயுத போட்டித் தன்மையைத் தவிர்க்கும் இந்தியாவின் யோசனையைப் பரிசீலிப்போம்

### -பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் தகவல்

(இஸ்லாமாபாத்)

அணுவாயுத போட்டித் தடுப் பிற்காக இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனாவிற்கிடையே பொது வான கொள்கைக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்துள்ள யோசனை புதுமை யானதொன்று. அத்தோடு இந்த யோசனை ஆராயப்படவேண்டும் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மசூர்கான் தெரிவித்துள்ளார்.

அணுவாயுத தற்காப்பு விடயத தில் நம்பிக்கையூட்டும் நடவடிக்கை கள் குறித்து 2 நாள் நிபுணர்கள் நிலைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக 8 உறுப்பினரடங் கிய பாகிஸ்தானிய குழு நேற்று புதுடில்லி வந்தது. இக்குழுவிற்கு பாகிஸ்தானிய வெளியுறவு அலுவ லக ஜரி உஸ்மான் ஹைதர் தலைமை தாங்கியுள்ளார். இந் நிலையில் அணுவாயுத நெருக்கடி நிலைமையின் அனைத்து அம்சங்க ளும் ஆராயப்படும் எனப் பாகிஸ்தா னின் வெளியுறவு அமைசசக செய்தித தொடர்பாளர் மசூர் கான் இஸ்லாம பாத்தில் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தலைநகரை மாற்றும் முடிவிலிருந்து தென்கொரிய சனாதிபதி நழுவல்

(சியோல்)

தென்கொரியத் தலைநகரை நாட்டின் தென்பகுதிக்கு மாற்றும் தமது திட்டத்தின் மீது கருத்துக் கணிப்பை நடத்துமாறு முன்வைக் கப்பட்ட கோரிக்கைகளைத் தென் கொரிய சனாதிபதி ரோமோ கியூன் நிராகரித்துள்ளார்.

இந்தத் திட்டம் தொடர்பாக மக்களிடம் கலந்தாலோசிக்கப் போவதாக அளித்த உறுதி மொழியை சனாதிபதி ரோமோகியூன் பொய் யாக்கி விட்டார் என, அதனை எதிர்த்தவர்கள் கூறுகின்றனர்.

எனினும் பாராளுமன்றமே இதனை முடிவு செய்ய வேண்டும் என சனாதிபதி ரோமோகியூன் தெரி வித்துள்ளார். நாட்டின் தெற்கில் உள்ள நான்கு நகரங்களில் ஒன்றைத தலைநகரமாக மாற்றுவதே இவ ரது திட்டமாக இருந்தது எனக் கூறப்படுகின்றது.



மேற்குக்கரையோரக் கிராமமான ஸ்காகாவின் தடைமுகாமின் கட்டடத் தொகுதியில் பலஸ்தீனியர் இஸ்ரேலியப் படையினருடன் கைகலப்பு

# சதாம் - அல்-ஹைதா அமைப்பிடையே நெருக்கமான உறவுகள் இருந்துள்ளன

### -அமெரிக்க சனாதிபதி கூறுகின்றார்

(வோஷிங்டன்)

முன்னாள் ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் அல்-ஹைதாவுடன் பயங்கரமான தொடர்புகளைக் கொண்டிருந்ததாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

ஈராக் தொடர்பான அமெரிக் காவின் கொள்கைகள் சவாலுக்கு உட்படுத்தப்படும் வேளையில் அவரது கருத்துக்கள் வெளியா கின்றன.

சதாம்-அல்-ஹைதா. தொடர்புகள் பற்றி பேசினாலும், செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஈராக்கின் முன்னாள் தலைவருக்கு பங்கிருப்பதை அவர் மறுத்தார். இந்தத்தாக்குதல் பற்றிய விசார ணைகளை மேற்கொண்ட ஆணைக் குழு சதாம்-அல்-ஹைதா தொடர்பு களை நிரூபிக்கக்கூடிய உறுதி யான சான்றுகள் இல்லை என்று கூறியிருக்கின்றது.

அமெரிக்க நகரங்கள் தீவிர வாதிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக அமெரிக்க அதிகா ரிகள் குழுவிசாரணைகளை நடத்தி வருகின்றது. சதாம்-ஹுசைனுக்கு அல்-ஹைதா இயக்கத்திற்கும் தொடர்புகள் இல்லையென்று விசா ரணைக்குழு கூறிவிட்டது.

ஆனால் இதனை மறுக்கும் விதமாக நேற்று முன்தினம் வோஷிங்டனில் செய்தியாளர்க ளிடம் பேசிய அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு.புஷ் அல்-ஹைதா வுக்கும் சதாம்-ஹுசைனுக்கும் இடையே தொடர்புகள் நெருக்கமாக இருந்துள்ளது என்று கூறியுள்ளார்.

அத்துடன் சதாம்-ஹுசைனுக்கு அல்-ஹைதா இயக்கம் மட்டுமின்றி வேறுபல தீவிரவாத இயக்கங்க ளுடன் தொடர்புகள் இருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் செப்டெம்பர் தாக்கு தலுக்கும், சதாம் ஹுசைனுக்கும் தொடர்பு இருப்பதாக தமது அரசு ஒருபோதும் கூறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# 18 கோடி ஆண்டுகளுக்கு முன்னான மீனினத்தின் படிமம் கண்டுபிடிப்பு

சுமார் 18 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அரியவகை மீன் இனத்தின் படிமங்களை பிரேசில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள் ளனர்.

டைனோசர் வாழ்ந்த காலத்தில் கடலுக்குள் ராக்டிஸ் எனும் அரிய வகை மீனினம் வாழ்ந்ததாகத் தற் போது தெரியவந்துள்ளது.

சுறா வகையைச் சேர்ந்த இந்த மீனினத்திற்குப் பறவையின் இறக்கை போன்ற உறுப்புகளும் நீளமான வாலும் இருந்துள்ளன. இந்த மீனினம் 30-40 சென்ரிமீற்றர் நீளம் கொண்டது என்றும் கடல் வாழ் உயிரினங்களில் மிகவும் பழமை வாய்ந்தது என்றும் பிரேசில் கடல் வாழ் ஆராய்ச்சியாளர்கள் கூறி யுள்ளனர்.



# இஸ்லாத்திற்குக் கட்டுப்பட்ட நாடாக சவுதி அரேபியா எப்போதும் திகழும்

### -அமெரிக்காவுக்கான தூதரக அதிகாரி அறிவுறுத்து

(றியாத்)

சவுதி அரேபியா அரசியல் சமூக சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி வந்தாலும் இஸ்லாத்திற்குக் கட்டுப்பட்ட நாடாகவே அது காணப படும் என சவுதி உயர் அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கான சவுதித் தூதரகத்தின் தகவல் துறைப் பணிப்பாளர் நேற்று றியாத்தில் உலக விவகாரங்களுக்கான சபை யின் மாநாட்டில் கலந்து கொண்ட போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இஸ்லாத்தின் பிறப்பிடமாகக் கருதப் படும் சவுதி அரேபியா மாநகர சபைத் தேர்தல் உள்ளிட்ட அவதானமான சீர்திருத்தங்களை அறி முகப் படுத்தியிருந்தது எனினும் இந்தச் சீர்திருத்த நடைமுறையை எவ்வா றும் நிறுத்த முடியாது என்று முடிக் குரிய இளவரசர் அப்துல்லா தெரி வித்திருந்தார். எனினும் அரசாங் கம் அதிரடியான மாற்றம் எதனை யும் மேற்கொள்ளவில்லையென் றும் சவுதித் தூதரகத்தின் தகவல் துறைப் பணிப்பாளர் வலியுறுத்தி யுள்ளார்.

# அமெரிக்கப் புலனாய்வாளர் சித்திரவதைக் குற்றச்சாட்டில் கைது!

(வோஷிங்டன்)

அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் ஒருவர் அந்த நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், ஆப்கானிஸ்தானில் சிறைக்கைதிகளைச் சித்திரவதை செய்தமை தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர் மீது சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றம் நிரூபிக்கப்படுமாயின் இந்த நபருக்கு 40 வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பாதைகள் திறக்கப்பட்டும் வாழ்வின் வாசல்கள் எங்கே ?

ராமாவில் - கோகிலாமனை என்ற பெயர் புதிய ஆண்டின் தொடக்க நாள் அன்று பரபரப்பாய்ப் பத்திரிகைகளில் பேசப்பட்ட பெயர். அந்த அளவுக்குப் புத்தாண்டின் தொடக்க நாள் அன்று தங்கள் உரிமைகளுக்காக சாவகச்சேரிப் பிரதேச செயலகம் முன்றில் மக்கள் நடத்தியமறியற்போர்; புதிய ஆண்டின் புதிய வாழ்க்கை வாழத் தங்கள் வீடுகளையும், வீதிகளையும்விட்டு ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற வேண்டி மக்கள் நடத்திய வாழ்க்கைக்கான முற்றுகைப் போராட்டம் பெரும் வெற்றியாக மாறியது.

படைத் தரப்பு மக்களின் வீடுகளையும், வீதிகளையும் விட்டு வெளியேறியது. இன்பக் கனவுகளுடன் தங்கள் வீடுகளையும், வீதிகளையும், காணிகளையும், எல்லைகள் இல்லாத வேலிகளையும் காணச் சென்ற மக்கள் வழமை போலவே ஆக்கிரமிப்பு இராணுவம் விட்டு வெளி யேறும் போது விட்டுச் செல்லும் எச்சங்களாய் தங்கள் வளவுகளில் மிஞ்சி இருந்த மண்மூட்டைகளையும், மரக்குற்றிகளையும், வெடித்த செல் குழாய்கள், மூடப்படாத பங்கர்கள், முட்கம்பிகள், சுவர்களில் ஆபாசம் தரும் படங்கள், கொச்சைத் தமிழில் ஆபாச வார்த்தைகள், சிங்கள மொழி எழுத்துக்கள் இவற்றை எல்லாம் சீர்செய்து வாழ முற்பட்ட இந்த மக்களுக்கு, அடிப்படைப் பிரச்சினைகள் பெரும் அதிர்ச்சி தரும் வகையில் இன்று அமைந்துள்ளது.

கொடிகாமத்திற்கு அருகில் உள்ள இக்கிராமம், கிராம சேவையாளர் பிரிவு ஜெ. 320 இல் அமைந்துள்ளது. இப்பகுதி மக்களின் முக்கிய தொழிலாய் விளங்கி வருவது விவசாயம் ஆகும். ஏர் கட்டிப் போர் அடித்த இப்பகுதியின், காய்கனிகள் தென்மாரட்சிச் சந்தைகளை ஆக்கிரமித்தமை - பழைய கதைகள். ஆனால், இன்றோ நிலைமை வேறு.

இப்பகுதிகளின் விவசாயக் களின் பெரும் நிலப்பகுதிகள் இராணுவத்தின் முட்கம்பி ஆக்கிரமிப்புக்குள் சிக்கிக்கிடக்கிறது. இதற்குள் இருந்த முப்பதுக்கும் மேற்பட்ட துரவுகள் முற்றாக இராணுவத்தால் தூர்க்கப்பட்டுள்ளன.

கொடிகாமத்தை இணைக்கும் பிரதான சாலையான அன்னமார் கோவில் வீதி பெரும் குன்றும் குழியுமாய்க் காணப்படுகிறது. இன்னும் இதற்கு ஒரு விடிவோ, முடிவோ இன்றி கைவிடப்பட்டப் பகுதியாக இருக்கிறது.

பாலர் பாடசாலை இயக்கம் இன்றி முடங்கியும் கிடக்கிறது. 1995 வரை நூற்றிக்கும் மேற்பட்ட மாணவர்களுடன் நான்கு ஆசிரியர்கள் கொண்டு இயங்கி வந்த இப்பாலர் பாடசாலை மீண்டும் இயங்குமா?... என்ற ஏக்கம் - இந்த மக்கள் மனதை வருடி வருகிறது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரசு வழங்குவதாக உறுதியளித்த இருபத்தைந்தாயிரம் ரூபா எப்போது கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.





காணிகளில் பதினாறு ஹெக்டயர் விவசாய நிலங்கள் சிறிலங்காப் படையினரின் தளமாக விழுங்கப்பட்டுள்ளது. வெறும் மூன்று ஹெக்டயர் நிலப் பகுதியே இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பகுதியாக இருக்கிறது.

இதனால், இப்பகுதி மக்களின் உணவுக்கான தேவைகள் கேள்விக் குறியாக இருக்கிறது. இங்கு ஜீவாதாரப் பிரச்சினை கள் இன்று தோற்றம் பெற்றிருக்கிறது. தங் சனவரி ஒன்றில் நூற்றி இருபத்தைந்து குடும்பங்கள் இங்கு மீளக் குடியமர்ந்ததற்குப் பின்னால் இந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட அரச தரப்பினால் கவனிக்கப்படவில்லை என்பது பெரும் குறையாய்ச் சொல்லப்படுகிறது.

அதேபோல் இப்பகுதியில் இயங்கி வந்த நாவலர் சனசமூக நிலையம் புனரமைக்கப்படாமலும் இந்த நிலையத்தில் இயங்கி வந்த

**ம. ஆன்சிலின்**

அரசோ, அரச சார்பற்ற அமைப்புக்களோ மீளக்குடியமர்ந்த இம் மக்களைப் பார்க்கக்கூட வரவில்லை என இப்பகுதி மக்கள் தமது வேதனைகளைத் தெரிவித் தனர்.

இங்கு மற்றுமோர் அடிப்படைப் பிரச்சினையாக எழுந்திருப்பது சோனகன் புலவு மயானம் ஆகும். இப்பகுதி மக்களின் இந்த மயானம் எந்தவித அடையாளமும் இன்றி இருக்கிறது.

அதற்கெ இருந்த கட்டடம் முற்றாக அழிந்த நிலையில் வெறும் தரையில் பிணங்களை எரிக்கும் நிலையிலேயே இப்பகுதி மக்கள் இருக்கிறார்கள். - மழை வந்து எரிந்த பிணங்கள் அணைந்த கதைகள் இங்கு நிறையவே நடந்ததாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். சரியான சாலை வசதிகளோ, விவசாயம் செய்ய ஏற்ற சூழலோ, தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு பாலர் பள்ளிகளோ இராணுவத்தால் இடிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைக்க இருபத்தைந்தாயிரம் பணமோ, இறந்தவரை எரிப்பதற்கு மயான வசதியோ இன்றி விரக்தியுடன் இந்தப் பகுதிக்கு விடிவு எப்போது பிறக்கும் எனப் புருவங்களை உயர்த்தி விழிகள் மூடாது பார்த்திருக்கிறார்கள் இப்பகுதி மக்கள். இதற்கு மத்தியில் இப்பகுதியில் இராணுவத்தினர் திடீர்த் திடீர் என்று வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து தேவையற்ற கேள்விகளைக் கேட்டு துன்புறுத்துவதாகவும், புதிதாக இப்பகுதிக்குப் பிரவேசிப்பவர்களைக் கடுமையாக நடத்துவதாகவும், உறவினர்கள் நண்பர்கள் என யாரும் வருவ தென்றால்கூட, பெரும் விசாரிப்புக்கள், நீண்ட நேரக் காக்க வைப்புக்கள், கதையளப்புக்கள் தொடர்வதாகவும், மாணவிகள் குறிப்பாக இளம் பெண்கள் என்றால், அவற்றை வார்த்தைகளில் சொல்ல முடியாது என்றும் இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். உண்மையிலேயே இப்பகுதி ஒரு பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அரசோ, அரச சார்பற்ற அமைப்புக்களோ இப்படியான இடங்களை இனங் கண்டு சேவை புரிய வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர்.

# கால்வாய் நோய் வேகமாகப் பரவுகிறது

# உடன் தடுப்பூசியை ஏற்றிக்கொள்க!

## கால்நடை வளர்ப்போருக்கு த.பொ.மே. நிறுவனம் கோரிக்கை

(ஒட்டுசுட்டான்)

கால்நடைகளை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கும் கால்வாய் நோய் தற்போது வன்னிப் பகுதியில் பரவி வருகிறது.அண்மையில் மல்லாவியில் தொடங்கிய இந்நோய் மிக வேகமாகக்கிளிநொச்சி, விசுவமடு, மாங்குளம் ஆகிய இடங்களில்பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தடுக்கும் முகமாக ஒவ்வொரு கால்நடைப் பிரிவுகளிலும் துரித கதியில் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகளை ஏற்றி வருகின்றனர். எனவே, கால்நடைகளை வளர்ப்போர் கால தாமதமின்றி உங்கள் பகுதிக் கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொண்டு இலவசத்தடுப்பூசிகளை ஏற்றி தங்கள் கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுக்குமாறு த.பொ.மே. நிறுவனம் கேட்டுக் கொள்கிறது. (05)

# கால் நடைகளுக்குக் கருச்சிதைவு நோய் தடுக்கும் வழிமுறை குறித்து ஆராய்வு

(ஒட்டுசுட்டான்)

வன்னிப்பிரதேசத்தில் உள்ள கால்நடைகளில் ஏற்படும் கருச்சிதைவு நோயினைத் தடுக்கும் முகமாக ஒன்றுகூடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்று கூடலில் வடபகுதிக் கால்நடைகளில் ஏற்படும் தொற்று நோய்கள் பற்றியும், அதைத்தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் ஆராயப்பட்டது. இதில் பொறுப்பதிகாரி கலாநிதி புவிராஜ் அவர்களும், பிரதேச கால்நடை வைத்தியர்களும் கலந்து கொண்டனர்.

இந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்குரிய கருவிகளைத் தென்பகுதியிலிருந்து எடுப்பதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்வதாகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

(05)

## பாரதி முன்பள்ளி விளையாட்டு விழா

(ஒட்டுசுட்டான்)

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் பொருண்மிய மதியுரையகமும் இணைந்து நடாத்தும் சம்மளங்குளம் கிராம பாரதி முன்பள்ளியினதும் ஒட்டுசுட்டான் நாவலர் முன்பள்ளியினதும் விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை ஒட்டுசுட்டான் சிவன்கோவிலடியில் பொருண்மிய மதியுரையகத் திட்ட மேற்பார்வையாளர் இ.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆசியுரையினை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன்வழங்கினார்.(05)

# திலீபன் மருத்துவ சேவையின் உளநல மருத்துவ சேவை

புளியங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தினரால் வவுனியா வடக்கு பிரதேசத்தில் உள்ள உள நோயாளர்களுக்கு சேவை வழங்கும் பொருட்டு வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் அனுசரணையுடன் உளநல சிகிச்சை நிபுணரின் சிறப்பு உளநல சிகிச்சை இன்று காலை இடம்பெற உள்ளதால் அனைத்து உளநலப்பிரச்சினைகள் உள்ளவர்களும் இதில் கலந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# மட்டு.எரிபொருட் கூட்டுத்தாபனத்தில் ஜே.வி.பி.யினரின் தொழிற்சங்கம்

## பணியாளர்கள் கவலை தெரிவிப்பு

மட்டக்களப்பு எரிபொருட் கூட்டுத்தாபனத்தில் ஜே.வி.பி.யினரின் தொழிற்சங்கம் நிறுவப்பட்டுள்ளதாகப் பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி.யின் உதவியுடன் இத்தொழிற்சங்கம் நிறுவப்பட்டுள்ளது. சங்கம் அமைக்கப்பட்டதையடுத்து நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் காராளசிங்கம் சிவராசசிங்கம் எனும் பாதுகாப்பு அதிகாரி இடம்மாற்றப்பட்டுள்ளார். இவ்விடமாற்றம் ஜே.வி.பி.யின் உயர் பீடத்தைச் சேர்ந்த விமல்வீரவன்ச, ரில்வின் சில்வா ஆகியோரது உதவியுடனேயே இடம்பெற்றுள்ளது.

# இடைவிலகிய 91 மாணவர்கள் பாடசாலைகளில் இணைப்பு

பட்டிருப்பு வலயத்தில் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் பதினாறு வயதுக்குட்பட்ட இடைவிலகிய தொண்ணூற்று ஒரு மாணவர்கள் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் போரதீவுப் பற்றில் முப்பது மாணவர்களும், மண்முனை தென் எருவில் பற்றில் இருபத்தொரு மாணவர்களும், பட்டிப்பளைப் பிரதேசத்தில் நாற்பது மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சீருடைத் துணிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இவர்களில் ஐம்பது ஆண்களும், நாற்பத்தொரு பெண்களும் அடங்குவர். இவ்வாறு இடைவிலகிய மாணவர்கள் பாடசாலைகளில் இணைந்து கொள்ள விரும்பினால் உடனடியாகப் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். இவர்களுக்கு யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் சகல உதவிகளையும் செய்யத் தாம் தயாராக உள்ளதாக வலயக்கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# சங்கம நிகழ்வு

(வட்டக்கச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டக்கச்சிப் பிரதேச இணைப்பாளர் றொஜிட்டின் ஒழுங்கு படுத்தலில் கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு இராமநாதபுரம் கமநல சேவைநிலையத்தின் கேட்போர் கூட்டத்தில் கமக்கார அமைப்புகளுக்கான மாதாந்த சங்கம நிகழ்வு இடம் பெற்றது.

இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட இணைப்பாளர் விநாயகமூர்த்தி, இராமநாதபுர விவசாயப்போதனாசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர். (12)

# சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்புகளால்
# 40 சதவீத விவசாயிகளின் முயற்சிகள் அழிப்பு!

## -யாழ். அபிவிருத்திச் சங்கம் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நாற்பது சதவீதமான விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளை இழந்து பொருளாதார நெருக்கடிக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.**

கடந்தகால சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கள் அதனைத் தொடர்ந்ததான அதியுயர் பாதுகாப்பு வலயம், மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்காமை, அவர்களின் பொருளாதார நிலையை மீளக் கட்டியெழுப்ப எவ்வித நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்படாமை என்பவற்றால் இந்த நெருக்கடி நிலைமை எதிர் கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் பெருமளவு விவசாய நிலங்கள் செய்கை பண்ணப்படாதிருக்கும் இதேவேளை விவசாயத்தை நம்பி வாழ்ந்த குடும்பங்கள் மீளமுடியாத பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்குண்டுள்ளதோடு தொடர்ந்து அகதிகளாக வாழவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையையிட்டு யாழ். அபிவிருத்திச் சங்கம் கவலையையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

தென்இலங்கை விவசாயிகளுக்காக சிறிலங்கா அரசினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் ஊக்குவிப்புத் திட்டங்களைப் போல் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புத்திட்டங்களை சிறிலங்கா அரசாங்கம் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் யாழ்.குடாநாட்டு விவசாயிகளுக்காக முன்வைக்கவில்லை.

இதனால் குடாநாட்டு விவசாயிகளின் அபிவிருத்தி, தொழில் மேம்பாடுகள் என்பன பாதிக்கப்பட்டுப்பின்தங்கிய நிலையிலேயே உள்ளன என அபிவிருத்திச் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (33)

## மாணவன் படுகாயம்

கொடிகாமத்தில் ஏற்பட்ட வீதி விபத்தில் கடைக்குச் சென்ற தவசிகுளம்-கொடிகாமத்தை வதிவிடமாகக் கொண்ட விக்னேஸ்வரன் சுரேஸ் (வயது15) என்பவர் படுகாயம் அடைந்துள்ளதுடன், எலும்பு முறிவும் ஏற்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (28)

## வீதி அதிகார சபையினர் கவனத்தில் கொள்க!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு-குறிகாட்டுவான் பகுதிகளுக்கிடையிலான படகுச் சேவையில் பயணிப்போர் உயிராபத்துக்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

மேற்படி பயணிகள் படகுச் சேவையில் பயன்படுத்த உகந்த படகுகள் முன்னர் பயன்படுத்தப்பட்டுவந்தாலும் தற்பொழுது அவை பழுதடைந்துவிட்டன. இதனால் தற்பொழுது சிறிய படகுகளே சேவையில் ஈடுபடுத் தப்பட்டு வருகின்றன.

தற்பொழுது வீசத்தொடங்கியுள்ள கடும் காற்றிற்கு ஈடுகொடுத்துப் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியாத இச்சிறிய படகுகள் சேவையில் ஈடுபடுத்தப் படுவதனால் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது பயணிகளுடன் படகு மூழ்கிவிடக்கூடிய அபாயமும் தோன்றியுள்ளது.

இதனைக்கருத்திற் கொண்டு மேற்படி பகுதியிலான படகுச் சேவைக்குப் பொறுப்பான வீதி அதிகாரசபை துரிதநடவடிக்கைகளை எடுக்காமை குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. (33)

## - கொடிகாமம் நகரப்பகுதியில் -
## குடிநீர் விநியோகத் திட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

நீர்ப் வேலைத்திட்டத்தின் கீழ் கொடிகாமம் நகரப் பிரதேசத்தில் ஏற்கனவே உள்ள நீர் விநியோகத்திட்டத்தை விஸ்தரிக்க பிரதேச செயலகத்தினால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரத்தைச் சுற்றியுள்ள பத்தொன்பது பொதுக்கிணறுகள் மீளப் புனரமைக்கப்பட்டு பாவனைக்கு ஏற்ற நிலையில் திருத்தப்பட இருக்கிறது. இதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(28)

## சாரதிகளுக்கான கலந்துரையாடல்

கொடிகாமத்தில் உள்ள அனைத்து தனியார் மோட்டார் வாகன சாரதிகளுக்கான கூட்டம் நடைபெற்றுள்ளது. இக்கூட்டத்தில் காவல்நிலையப் பொறுப பதிகாரி கலந்துகொண்டு வாகன சாரதிகளுக்கான வீதி ஒழுங்கு முறைகள் குறித்தும், மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார். (28)

## மின்வயரைக் கடித்தவர் மின்சாரம் தாக்கிப்பலி!

மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உடல் கருகிப் பலியாகியுள்ளார். நேற்றுமுன்தினம் யாழ்.தீவகத்திலுள்ள நயினாதீவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கு.அருட்செல்வம் (வயது 30) என்பவரே பலியாகியுள்ளார்.

மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருந்த வயர் ஒன்றில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்ததை அறியாத பிரஸ்தாபநபர் அவ்வயரை எடுத்து வாயினால் கடித்து அதனுள் இருக்கும் கம்பியை உருவி வேறாக்க முயன்றபோதே அவரை மின்சாரம் தாக்கியுள்ளது.

சம்பவத்தில் பலியான பிரஸ்தாபநபர் நீண்டகாலமாக சுவிஸ் நாட்டில் வசித்துவிட்டு உறவினர்களைப் பார்ப்பதற்காக அண்மையில் யாழ்.வந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

## ஏற்புத்தடை மருந்துக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பல வைத்தியசாலைகளில் ஏற்பூசி மருந்திற்கு பெரும்தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரியவருகிறது.

நாய்கடி, மற்றும் ஏற்புவலி ஏற்படக்கூடிய சுகயீனங்களுக்கு உள்ளாவோருக்கு ஊசிமூலம் ஏற்றப்படும் எ.ஆர்.வி.எனும் மேற்படி ஏற்புவலி ஊசி மருந்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள பருத்தித்துறை வைத்தியசாலை, தெல்லிப்பளை வைத்தியசலை, சாவகச்சேரிவைத்தியசாலை, ஊர்காவற்துறை வைத்தியசாலை என்பவற்றில் தட்டுப்பாடு நிலவிவருகிறது. இதனால் சம்பந்தப்பட்ட ஊசிமருந்து ஏற்றப்படவேண்டிய நோயாளர்கள், பலர் பலவித உயிர் அபாயங்களையும் எதிர்கொண்டுவருகின்றனர். (33)

## மனிதவுரிமை தொடர்பாக குடாநாட்டில் படையினருக்குத் தொடர்ந்தும் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

பெண்ணுரிமைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அறிவினை யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள பொலிசார் மற்றும் இராணுவத்தினர் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மனித உரிமைகள ஆணைக்குழுவினா தீவிரப்படுத்தியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் பெண்ணுரிமை மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள அரச படையினரே அதிகம் சம்பந்தப்பட்டிருக்கின்றமை ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இதற்குப் பொலிசார்மற்றும் இராணுவத்தினர் போன்ற அரசபடையினர் மத்தியில் பெண்ணுரிமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான போதிய அளவு அறிவின்மையே காரணம் எனக் கூறப்படுகிறது. இதனைக் கருத்திற் கொண்டே பொலிசார் மற்றும் இராணுவத்தினருக்குப் பெண்ணுரிமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அறிவினைப்புகட்டி வருவதுடன் மீறும் சந்தர்ப்பங்களில் கிடைக்கும் தண்டனைகள் தொடர்பாகவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் அறிவுறுத்தி வருகின்றனர். (33)

## பிரதான அஞ்சல் அலுவலகத்திற்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதான அஞ்சல் அலுவலகம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவதனால் தென்மராட்சிப் பிரதேச வாழ்.மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தென்மராட்சியில் உள்ள உப அஞ்சலகங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ள சாவகச்சேரி பிரதான அஞ்சல் அலுவலகமானது அரசின் கடுமையான புறக்கணிப்புக்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அஞ்சல் அலுவலகத்திற்குத் தேவையான உபகரண மற்றும் தளபாட வசதி இன்மை பெரிதும் நிலவிவருகின்றது. இதை விட அஞ்சல் அலுவலக. அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறையும் நிலவி வருகிறது.

இவ்வாறான அடிப்படை வசதியீனங்களால் மேற்படி அஞ்சல் அலுவலகத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பித்து விடக்கூடிய நிலை தோன்றியிருக்கிறது. இதனால் தென்மராட்சி மக்கள் தமது தபால் அஞ்சல் சேவைகளை திருப்திகரமாகப் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது. (33)

## சிறிலங்காப் படையினர் ஒத்துழைப்புடன் காரைநகரில் சட்டவிரோத செயல்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் பிரதேசத்தில் சிறிலங்காப் படையினர் மற்றும் பொலிசாருடைய ஒத்துழைப்புகளுடன் சட்டவிரோத செயல்கள் பலவும் இடம் பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது.

படையினரது அச்சுறுத்தல்கள் மற்றும் அடாவடித்தனங்கள் காரணமாக மேற்படி பகுதிகளில் ஆள் நடமாட்டம் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தும் சிலர் அப்பகுதி தனியார் காணிகளில் உள்ள பச்சைமரங்களைத் தறித்தெடுத்து விற்பனை செய்வது, ஆட்கள் அற்றவீடுகளின் கதவு,யன்னல், நிலை போன்ற பெறுமதி மிக்க தளபாடங்களைத் திருடி விற்பது கசிப்பு உற்பத்தி போன்ற பல்வேறுபட்ட சட்டவிரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவை தொடர்பில் அப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினரோ, பொலிசாரோ நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோரைச் சட்டத்தின் முன்நிறுத்தாது, கைக்கூலிகளையும் இலஞ்சத்தையும் பெற்று இவ்வாறான சட்டவிரோதச் செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர்.

இது குறித்துப் பலரும் ஆட்சேபம் தெரிவித்திருப்பதுடன் இவ்வாறான சட்டவிரோதச் செயல்களுக்குப் பொலிசாரோ, படையினரோ ஒத்துழைப்பு வழங்கக் கூடாது எனவும் கோரியுள்ளனர். (33)

## மெய்வல்லுனர் போட்டி

கரவெட்டி ரலன்ற் முன்பள்ளி மெய்வல்லுனர் போட்டி நாளைய தினம் பிற்பகல் 2 மணியளவில் தலைவர் ஐ.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இ.வ.முகாமையாளர் ந.இராஜகோபால் கலந்து கொள்கிறார், கரவெட்டி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கருணா சிறப்பு விருந்தினராகக், கலந்து கொள்கின்றார்.

## திரைப்பட விமர்சனம்

"நல்ல சினிமா ஊடாக இன்னுமோர் உலகம்" எனும் மகுடத்தின் கீழ் கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ சங்கத்து கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற ஆதரவின் கீழ் இயங்கும் திரைப்பட வட்டத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு சங்க மண்டபத்தில் "தங்கர் பச்சானின்" இயக்கத்தில் உருவான "தென்றல்" எனும் முழு நீளத் திரைப்படம் காண்பிக்கப் படவுள்ளது. திரைப்பட முடிவில் ஈழத்தின் திரைப்பட இயக்குனர் ஞானரதன், திரைப்பட விமர்சகர் குப்பிளான் ஐ.சண்முகம் ஆகியோரின் வழிநடத்திலில் விமர்சனமும் கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளன. திரைப்பட இரசனையாளர் அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு திரைப்பட வட்டத்தினர் வேண்டுகின்றனர்.

## ஜீலை 15இற்கு வழங்க ஏற்பாடு

தென்மராட்சிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு இதுவரை வழங்கப்படாத இருபத்தைந்தாயிரம் ரூபாவை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குள் வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதன்படி எழுதுமட்டுவாள்,மிருசுவில், கொடிகாமம், சாவகச்சேரி மற்றும் கைதடி ஆகியவற்றின் ஆறு கிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்கும் இதனை உடனடியாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (28)

## "நீர்ப், நிகொட்" திட்டங்களின் கீழ் யாழ்.இல் 69 வேலைகள் முன்னெடுப்பு

(வடமராட்சி)

யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியீட்டலில் "நீர்ப்" திட்டத்தின் கீழும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியீட்டலில் நிகொட் திட்டத்தின் கீழும் 69 வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருவதாக யாழ். செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருகோடியே 45 இலட்சம் ரூபா மதிப்பீட்டில் கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. நீர்ப் (NEERP) திட்டத்தின் கீழ் பருத்தித்துறை வீதியிலுள்ள நவிண்டில் பகுதியில் இக்கட்டடப்பணிகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் செப்ரம்பர் மாத முற்பகுதியினுள் இந்நிர்மாண வேலைகள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே சாவகச்சேரிப் பிரதேசசெயலகத்திற்கான புதிய கட்டடம் அமைத்தல் மற்றும் கைதடி முதியோர் இல்ல விடுதி புனரமைப்பு,அரியாலைகலாசார மண்டபஅபிவிருத்தி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர் விடுதி புனரமைப்பு மற்றும் தெல்லிப்பளை புற்றுநோய்ப் பிரிவு கட்டடப் புனரமைப்பு, பண்ணை பிராந்திய மருந்துக் களஞ்சிய புனரமைப்பு, மார்புச் சிகிச்சை வைத்தியசாலை, சிகிச்சை நிலையப் புனரமைப்பு என்பவை உள்ளிட்ட 17 வேலைத் திட்டங்கள் குறித்த "நீர்ப்" திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை "நிகொட்" திட்டத்தின் கீழ் 380.1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 52 வேலைத் திட்டங்கள் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.அவற்றில் பெரும்பாலானவை முடிவுறும் நிலையில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (27)

# பண்டா கரடியினத்தின் அழிவுக்கு மனித செயற்பாடுகளே காரணம்

விலங்குகளை வேட்டையாடுதல், அவற்றின் இருப்பிடங்களை அழித்தல், வன வள பாதுகாப்பு



ஊழியர்களின் அசமந்தப் போக்கு என்பவற்றால் தற்போது அருகி வரும் றைனோசரஸ், வங்காளப் புலி, ஆசிய யானைகள் ஆகியவற்றிற்கு முதல் சீனாவிலுள்ள பண்டா இன விலங்குகள் உலகில் மறைந்துவிடும் நிலை உருவாகியிருப்பதாக உலக வனவிலங்கு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பண்டா இன விலங்குகளைப் பாதுகாக்கவென அமைக்கப்பட்ட அமைப்புக்கள் போலி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக விஞ்ஞானி ஜோர்ஜ் ஷெலி தனது புதிய ஆய்வின் மூலம் தெரிவிக்கின்றார். அத்துடன் அறிவின்மை, உதாசீனம் என்பவற்றாலும் விலங்குகளின் பராமரிப்புக் குறைந்து போவதாக 291 பக்கங்களைக் கொண்ட சிக்காக்கோ பல்கலைக்கழகம் வெளியிட்ட நூல் ஒன்றில் குறிப்பிடப்படுகிறது.

பண்டா விலங்குகளின் தோல் அலங்கார தேவைகளுக்காகப் பயன்படுத்துவதன்றி வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது. எனினும் கொங்கொங், தாய்வான், ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள கோடீஸ்வரர்கள் இதன் தோல்களை 40ஆயிரம் முதல் 50 ஆயிரம் டொலர் வரை விலைகொடுத்துப் பெற்றுக்கொள்கின்றனர். அதனாலேயே இந்த விலங்கினம் சட்டவிரோதமாக வேட்டையாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல வருடங்களுக்கு முன்பு இப் பண்டா இன விலங்குகளைப் பாதுகாக்கும் நோக்கில் பெருந்தொகைப்பணம் செலவு செய்யப்பட்டுச் சரணாலயங்கள் அமைக்கப்பட்டாலும் அவற்றில் இனப்பெருக்கம் செய்யக்கூடிய நவீன வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. அத்துடன் விலங்கியல் வைத்தியர்களும் பற்றாக்குறையாக இருந்தனர்.

பண்டா இன விலங்குகள் அதிகமாக வாசம் செய்ய விரும்புவதும், இனப்பெருக்கம் செய்ய ஏற்ற இடமும் மூங்கிற் காடுகளே. அழகிய, அமைதியான சிறந்த உருவ அமைப்பைக் கொண்ட அவ் விலங்குகள் வாழும் காடுகள் அழிக்கப்படுவதால் அவற்றின் பெருக்கம் குறைந்து வருகிறது.

முன்னர் சீனாவில் 145 பண்டா இன விலங்குகள் காணப்பட்டதாகவும், அவற்றுக்காகச் சீனா 50ஆயிரம் ஏக்கர் காட்டு நிலத்தை ஒதுக்கிவிட்டிருந்ததாகவும் ஆயினும அவை முறையாகப் பராமரிக்கப் படாததால் தற்போது 72 பண்டா விலங்குகளே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1965, 74, 97 ஆகிய வருடங்களில் வெளியிடப்பட்ட செய்மதிப் படங்கள் மூலம் சொலொங் சரணாலயத்தில் உள்ள மூங்கிற் காடுகள் அழிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இங்கு பல்லாயிரம் உல்லாசப்பயணிகள் வந்து பண்டா விலங்குகளைக் கண்டு ரசித்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு வரும் உல்லாசப் பயணிகளுக்கான விடுதிகளையும் உணவு விடுதிகளையும் அமைப்பதற்கு மேற்படி காடுகள் அழிக்கப்படுவது தெரியவருகிறது. பண்டா குட்டிகளை ஈனுவது இரண்டு வருடத்துக்கொருமுறையாகும். எனினும் அவற்றைப்பாதுகாக்க ஏற்ற காடுகள் இல்லாததால் இவை அற்றுப்போகும் நிலை தோன்றியிருக்கிறது.

பண்டாவின் உணவு மூங்கிற் தழைகள் ஆகும். இவற்றை அழிக்கும் வேளையில் பண்டா இன விலங்குகளும் அழிவுக்குள்ளாகும். விஞ்ஞானிகளின் கருத்துப்படி காடழிப்புத் தொடருமாயின் 2025ஆம் ஆண்டளவில் உலகில் பண்டா விலங்குகள் முற்றாக அழிந்துவிடும் நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சனிக்கிரகத்தை நோக்கி காஸ்னி விண்வெளி ஓடம்

சனிக்கிரகத்தை நோக்கி நாசா விண்வெளி ஆய்வுமையத்தால் அனுப்பப்பட்டுள்ள "காஸ்னி" விண்வெளி ஓடம் 30 சந்திர மண்டலத்தில் ஒன்றான "கோபேக்"குக்கு மிக அண்மையில் செல்ல இருக்கிறது. இவ்வாறான பிரயாணத்தின் போது மேற்படி விண்கலம் சந்திர மண்டலம் தொடர்பான பல தகவல்களைச் சேகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சந்திர மண்டலம் 220 கி.மீ குறுக்கவளவை கொண்டது. 1981ஆம் ஆண்டு "வைய்ஜென்" என்ற விண்கலம் எடுத்த படங்களிலும் பார்க்க இவ் விண்கலம் எடுக்கும் படங்கள் தெளிவானதாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# மொழியை உணரும் ஜேர்மனிய நாய்

ஜேர்மனியில் மொழிகளை உணரும் திறன் கொண்ட நாய் ஒன்று இருப்பதனை மானிடவியல் கல்விக்கழகம் ஆராய்ந்ததன் மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் செல்லப் பிராணியாக றிக்கோ எனும் நாயை சுஷேன்பர்த் என்பவர் வளர்த்து வருகின்றார். இந்த றிக்கோ 200இற்கும் மேற்பட்ட பொருட்களை இனங்காணும் சுஷேன்பாத் பொருள் ஒன்றின் பெயரைச் சொன்னவுடன் றிக்கோ உடனே அதனை இனங்கண்டு எடுத்துவரும் ஆற்றலுள்ளது. இந்த றிக்கோவை மானிடவியல் கல்விக்கழக விஞ் ஞானிகள் ஆராய்ந்தனர். இந்தறிக்கோ மொழிகளை உணரும் ஆற்றலை அதிகமாகக் கொண்டது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# தனது நரம்பை மகனுக்கு தானம் வழங்கிய தாய்

அமெரிக்காவின் லாங் பிராஞ் நகரைச் சேர்ந்த மைசெல்லி கிப்சன் என்ற தாயார் கார் விபத்தில் சேதமடைந்த தனது மகன் கை மீண்டும் செயற்படுவதற்காக நரம்புகளைத் தானமாக வழங்கியுள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் 21ஆம் திகதி அன்று வில்லியம்ஸ் கிப்சன் சென்ற கார் இன்னொரு காருடன் மோதியது. இநத விபத்தில் வில்லியம்ஸ் கிப்சனின் இடது கை, தோட்பட்டைமூட்டு ஆகியவை கடும சேதமடைந்து, கை செயலிழந்தது. அவரால் ஒரு சாவியைக்கூடத் தூக்கமுடியாது.

இந்நிலையில் நரம்பு தான அறுவைச்சிகிச்சை பற்றிக் கேள்விப்பட்ட அவரது தாயார் மகனைக் குணப்படுத்த நரம்பு தானம் செய்ய முடிவு செய்தார். இதையடுத்து மேன்மவுத் மெடிக்கல் மையத்தின் டாக்டர் ஆன்ட்ரூ எல்க்வுட் என்பவர் தலைமையிலான மருத்துவக்குழு மைசொல்லி கிப்சன் உடம்பில் இருந்து நுட்பமான நரம்புகளைச் சேகரித்து அதை வில்லியம்ஸ் கிப்சன் கைகளில் பொருத்தினர். இந்த அறுவைச் சிகிச்சை வெற்றி பெற்றால் அது வில்லியம்சுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அவரால் ஒரு புத்தகத்தைத் தூக்கமுடியும்.

பொதுவாக நரம்புகளின் வளர்ச்சி மிகவும் மெதுவாகவே இருக்கும். இந்நிலையில் வில்லியம்சுக்கு தற்போது பொருத்தப்பட்டுள்ள நரம்புகள் வளர்ந்து, ஒரிஜினல் நரம்புகளுடன் இணைந்து செயற்படுவதற்கு நீண்ட நாட்கள் பிடிக்கும். அதன் பிறகுதான் அவரது கைகளில் உணர்வு ஏற்படும் என்று டாக்டர் எல்க்வுட் கூறினார்.

# ஈரூடகக் கார்




கிப்ஸ் அக்கியூடா நிறுவனம் நீரிலும்,நிலத்திலும் செல்லக்கூடிய கார் ஒன்றை வடிவமைத்துள்ளது. இக்காரின் வேகம் நிலத்தில் மணித்தியாலத்திற்கு 100கி.மீற்றர் ஆகவும், நீரில் மணித்தியாலத்திற்கு 30 கி.மீற்றர் ஆகவும் காணப்படுகின்றது. இவ் அதிவேகமான ஈரூடகக் காரின் பெறுமதி 150000 ஸ்ரேலிங்பவுண்ஸ் ஆகும்.

# வயது முதிரும்போது மூளையின் செயற்றிறன் குறையக்காரணம் என்ன?

மனிதர்களுக்கு வயது ஆக ஆக இயற்கையாகவே மூளையின் செயற்றிறன் குறைகிறது. குறிப்பாக 40 வயதைத் தொடும்போது இத்தகைய குறைவு ஆரம்பிக்கும். இதற்கு என்ன காரணம் என்பது இது வரை புரியாத புதிராக இருந்து வந்தது. இந்நிலையில் தற்போது இந்தப்புதிருக்கு விடை கிடைத்துள்ளது.

26வயது முதல் 106 வயது வரை மூளையில் ஜீன்களின் செயற்பாடுகளை ஆராய்ச்சியாளர்கள் கூர்ந்து கவனித்தனர். அதன்மூலம் 40வயதை எட்டிய நேரத்தில் முன்பு போலச் சிறப்பாகச் செயற்படாத சில குறிப்பிட்ட ஜீன்களை ஆராய்ச்சியாளர்கள் தனிமைப்படுத்தியுள்ளனர். மூளையில் பல்வேறு பாகங்களின் தகவல் பரிமாற்றத்திற்கும், தகவல் தொடர்பு துண்டிப்பிற்கும் இந்த ஜீன்களே காரணமாகும். மேலும் படித்தல், நினைவாற்றல் போன்ற முக்கிய வேலைகளுக்கு இவையே முழு முதற் காரணிகள்.

40வயதை எட்டுகின்ற போது இந்தக் குறிப்பிட்ட ஜீன்களின் டி.என்.ஏ.யில் சேதம் அதிகரிக்கிறது. இது வயதுக்குத் தகுந்தாற் போல இருக்கும். டி.என். ஏ.யில் ஏற்படும் சேதம் குறிப்பிட்ட ஜீன்கள் சம்பந்தப்பட்ட அனைத்து இயக்கங்களிலும் பாதிப்பை உண்டு பண்ணுகிறது. அதாவது படிப்பது, நினைவாற்றல், மூளையில் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையே தகவல் பரிமாற்றம் போன்ற முக்கியமான பணிகளில் தொடர்புடைய புரோட்டீன்களின் உற்பத்தி குறிப்பிட்ட ஜீன்களில் குறைந்துவிடும். இதன் எதிரொலியாக மூளையின் செல்கள் படிப்படியாகச் சாகத் தொடங்கிவிடும். அதன் விளைவாகத் தான் மூளையின் செயற்றிறன் குறையத் தொடங்குகின்றது.

# கணிப்பொறியின் வழிகாட்டலில் மூட்டு மாற்று அறுவைச்சிகிச்சை

(புதுடில்லி)

கணிப்பொறியை வழிகாட்டுதலாகக் கொண்டு மூட்டுமாற்று அறுவைச்சிகிச்சை செய்யும் முறை இந்தியாவிலே முதல் முறையாகச் சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மனித கணிப்புக்களின் அடிப்படையிலே இது நாள்வரை செய்யப்பட்ட இச் சிகிச்சை முறை முதல் முறையாகக் கணிப்பொறி வழிகாட்டுதல் அடிப்படையில் பரீட்சிக்கப்பட்டு வெற்றிகரமாகப் பலன் அளித்துள்ளது. இது முழங்கால் மாற்று அறுவைச்சிகிச்சைக்குப் பயன்படுவதாக இது சம்பந்தமான மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

# 120 கி.மீ வேகத்தில் செல்லக் கூடிய படகு

மணித்தியாலத்திற்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய அதிநவீன படகு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிவேகப் படகினை இங்கிலாந்து தயாரித்துள்ளது. இந்தப்படகு மூலம் பிரிட்டன் கடற்பகுதியை 31 மணிநேரத் திற்குள் சுற்றிவந்து சாதனை படைக்கவும் இங்கிலாந்துப் படகோட்டிகள் திட்டமிட்டுள்ளனர்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" இந்தத் தமிழ்ப் பழமொழிக்கும் சிறிலங்காவின் அரசியல் நிலைமைகளுக்கும் நிறையவே தொடர்பிருக்கிறது. பேரினவாதம் பேசி அரசியற் பீடம் ஏறி வந்த சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் அந்தப் பேரினவாதப் போக்கைக் கைவிட முடியாத நிலையில் தமது அரசியல் பயணத்தைச் செய்ய வேண்டியுள்ளது. பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்றோர் போட்டி போட்டுக்கொண்டு பேரினவாதம் பேசி சிங்கள மக்கள் மத்தியில் தமிழின விரோதப் போக்கை ஏற்படுத்தி, அதனூடாகத் தமது அரசியல் இருப்பை நிலைநிறுத்தி வந்த போக்கானது, அவர்களது அரசியல் வாரிசுகள் அரசியற் பயணத்திற்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதனையே



முறைக்கு உட்படுத்தப்படுகின்ற நிலையில், தமிழினம் இனவாதிகளை எதிர்க்கின்ற நிலையில்

ளாதாரம் கெட்டுக் குட்டிச் சுவராவதை எவராலும் தடுக்க முடியாது. அத்துடன் சிங்கள தேசம் தமிழர்களின் விரோதி என்பதைச் சர்வதேசம் புரிந்து தமிழர்களுக்குச் சாதகமான முடிவுகளை எடுத்துவிடும். இந்த நிலையைத் தவிர்ப்பதானால் தமிழர்களை அனுசரித்துப் போகின்ற நிலையைக் கடைப்பிடித்துப் போகின்ற கட்டாய நிலையில் சிங்கள அரசானது இருக்கிற வகையில், தமிழர்களது உரிமை தொடர்பாகச் சாதக

இனவாதப்போக்கைக் கைவிட்டு விடாவிடினும் கைவிட்டு விட்டவர்கள் போல் காட்டி அரசியல் நடத்த இருபெரும் கட்சிகளும் முன்வரவேண்டிய கட்டாய நிலையில் செயற்பட எத்தனிக்கின்ற கட்டத்தில் கைவிடப்பட்ட இனவாதப் பூதத்தை வளர்த்து அரசியல் நடத்தி வளர்ச்சி காண்பதற்கு ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தயாராகவே இருக்கின்ற நிலையில் பேரினவாதப்போக்கை கைவிடமுடியாத நிலையிலும், சர்வதேசத்திற்குத் தாம் இனவாதிகள் இல்லை என்பதைக் காட்ட முடியாமலும் தவித்து வருகின்ற தற்போதைய சந்திரிகா அரசு நிதானம் இழந்த நிலையில் சில அறிக்கைகளை விட்டு வருகின்றது. உள்நாட்டில் தாம் சிங்களவர்களுக்கு விசுவா

களில் ஏற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திப்பணிகளைப் பொறுத்தே சிறிலங்கா அரசிற்கான உலக நாடுகளின் உதவி" என்ற சர்வதேசத்தின் நிலைப்பாடானது சந்திரிகா அரசின் மீது சர்வதேச நாடுகள் கொண்டுள்ள சந்தேகத்தையே காட்டுகின்றது. குறிப்பாகச் சமாதான முயற்சிகளின் வெற்றிகளிலேயே இலங்கைத்தீவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி தங்கியிருக்கின்ற கட்டாயமான தற்போதைய காலகட்டத்தில் தனது கூட்டுக்கட்சி ஜே.வி.பி. யின் இனவாதப் போக்கிற்கு அடிபணிந்து உள்நாட்டில் அரசியல் நடத்த வேண்டிய கட்டாயத்திலும் சமாதான முயற்சிகளைச் செய்வதாக வெளிநாடுகளில் காட்ட வேண்டிய நிலையிலும் இரு மாறுபட்ட வேடங்களில் சந்திரிகா அரசானது மேடையேறி அரசியல் நாடகம் நடத்தத் தொடங்கியுள்ளது. இந் நாடகம் மூலம் சந்திரிகா அரசானது எந்தனை நாளைக்குச் சர்வதேசத்தை ஏமாற்ற முடியும்.? இவ் அரசியல் நாடகம் உலகின் கண்களுக்குத் தெரியவருகின்ற நிலையில் இனவாதப்போக்கில் அரசியல் நடத்

# இனவாதப் பூதத்தின் பிடியில்

தற்போதைய சிறிலங்கா அரசியலில் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலையில் இவ்விடயத்தைப் படிக்கிற போது உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம் ஏன் சிறிலங்கா அரசானது பேரினவாதப் போக்கைக் கைவிடவேண்டும்?... வழக்

அப்போது இருக்கவில்லை. வன்முறைக்கு எதிரான அகிம்சை நிலைப் போராட்டமே தமிழினத்தின் ஆயுதமாக இருந்தது. இப்படிப்பட்ட நிலையில் தமிழினம் அடக்கப்படுவது சர்வதேசத்திற்குத்

மான முடிவுகளையும் எடுக்க வேண்டும். இப்படியான ஒரு கட்டத்தில் சிறிலங்கா அரசானது தாம் ஒரு இனவாத அரசு என்பதைக் காட்டிக்கொள்வதைத் தவிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்




# சிறிலங்காவின் தலைவர்கள்

கம் போலவே தமிழின விரோதம் பேசி சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தொடர்ந்தும் தமது அரசியற் பயணத்தை நடத்தலாமே?... அதற்கு விடைகாணுவதென்றால், சிறிலங்காவின் அரசியல் வரலாற்றுடன் கூடவே தமிழினத்தின் சமகால நிலைமையினையும், இலங்கைத்தீவு தொடர்பான சர்வதேச நாடுகளின் நிலைப்பாடுகளையும் பார்க்க வேண்டும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆரம்பகால அரசியல் இருப்பிற்கும் பண்டாரநாயக்கவின் அரசியல் பயணத்திற்கும் தமிழின விரோதப் போக்குகள் முக்கிய பங்கை வகித்தன. இந்த நிலையில் இனவாதத் தூண்டலின் உச்ச வடிவாக தமிழினத்தின் மீது வன்முறைகள் ஏவிவிடப்பட்டது. உதாரணமாக 1958 ஆம் ஆண்டுக் கலவரம். 1983 யூலைக்கலவரம், இச்சம்பவங்களைத் தூண்டிவிடுவதன் மூலம் சிங்கள இனத்தை ஒரு ஆளும் வர்க்கமாகவும் தமிழினத்தை ஒரு அடிமை இனமாகவும் சிங்கள மக்கள் மத்தியில் சித்திரித்து அவர்களிடம் இருந்து வாக்குகளைப் பெற்று அரசியல் இருப்பைத் தக்க வைத்து வந்தது அன்றைய சிறிலங்கா. அந்த நிலையில்-தமிழினம் வன்

தெரியவருவதும் இல்லை. அப்படித்தெரிய வரினும் அவர்கள் பாராமுகமாக இருந்து விடுவார்கள். ஆனால் தமிழினத்தின் தற்போதைய நிலை யோ அவ்வாறு இல்லை. இனவாதத்தை எதிர்த்து ஆயுதப் போராட்டம் செய்த தமிழினம் இன்று தனக்கு ஒரு பல மான படைக்கட்டு மானத்தை வைத்துள் ளது. தமிழினத்தின் மீது ஏவி விடப்படுகின்ற வன்முறைகள் உலகின் கண்டனத்துக்கு உள்ளாகின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் இனவாதம் ஊட்டி வளர்க்கப்பட்ட சிங்கள வாக்காளர்கள் தற்போதைய தமிழினத்தின் பலம் பொருந்திய நிலைப்பாட்டையோ அல்லது சர்வதேசத்தின் இலங்கைத்தீவு மீதான பார்வையையோ கருத்திற்கொள்ளாது இனவாதப் போக்கில் நிற்பதானது சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பலத்த கண்டனத்துக்கு உள்ளாக்கி உள்ளது. இனவாதம் பேசி அரசியல் நடத்தினால் சர்வதேசத்தின் எதிர்ப்பைத் தற்போதைய அரசானது சந்திக்க வேண்டும். சர்வதேச எதிர்ப்பு என்னும் போது சர்வதேச உதவிகள் சிறிலங்காவிற்குக் கிடைக்காமல் போய்விடும். அபாய நிலையில் நலிந்து போய் இருக்கின்ற சிறிலங்காவின் பொரு

ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இனவாதம், ஆட்சியாளர்களால் பின்தள்ளப்படும் போது அதைத் தூக்கிப்பிடித்து அரசியல் வளர்ச்சி காணப்பல கட்சிகள் தயாராகவே உள்ளன. அதற்கு 'ஆதரவு தெரிவிக்க இனவாதம் ஊட்டப்பட்ட சிங்கள வாக்காளர்கள் தாராளமாகவே இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லப்போனால் ரணில் விக்கிரமசிங்க அரசானது இனவாதப் போக்கில் இருந்து சற்றே விலகி யதார்த்த நிலையை உணர்ந்து செயற்பட விளைந்த போது இன வாதம் தலைதூக்கி ஆட்சியை மாற்றி அமைத்தது. இதில் பகிரங் கமாக இனவாதம் பேசிய ஜே.வி.பி.யும் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவும் வளர்ச்சி கண்டன. இவ் வெற்றியானது ஆளும் கட்சியாக இருந்து வந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. தமது முன்னோர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட பேரினவாத நெருப்பில் உதிரிக்கட்சிகளாக இருந்த சிறு கட்சிகள் அதிரடி வளர்ச்சி காண்பது இவர்களால் சகித்துக் கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கும்.

சமாகப் பேசி இனவாதப்போக்குவாதியாகவும் சர்வதேசத்திற்கு தாம் ஒரு சமாதான வாதியாகவும் காட்ட முயலும் சந்திரிகா அரசானது பேரினவாதப் பின்னணியைக் கொண்ட தமது அரசியல் நிலைப்பாட்டில் இருந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது என்பது நன்றாகவே தெரிகிறது.

வடகிழக்குத் தமிழர் பகுதியை தமது மூத்த அரசியல் தலைவர்களை நொந்து கொள்வதைத்

**முத்தையனூர்: துஷ்யந்தன்**

தவிர சந்திரிகா அரசால் ஏதும் செய்ய முடியாது.

□ □ □

## கட்சி அமைப்பாளர்களின் நியமன முறை குறித்து ஆராய ஐ.தே.கட்சி ஆணைக்குழு அமைக்கும்

(கொழும்பு)

ஐ.தே. முன்னணியின் அமைப்பாளர்களை நியமிக்கும் முறை தொடர்பாகக் கட்சி ஆதரவாளர்களினதும், நடு நிலையாளர்களினதும் கருத்தை அறியும் நோக்கில் ஆணைக்குழுவொன்றை அமைக்க அக்கட்சி தீர்மானித்திருப்பதாக அதன் பிரதம அமைப்பாளரும், செயலாளருமான எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார். ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்கவினால் விரைவில் இந்த ஆணைக்குழு நியமிக்கப்படலாம் எனக் கூறிய அவர் காலத்துக்கேற்றவாறு புனரமைப்புச் செய்ய வேண்டிய முறை தொடர்பாகப் பாராளுமன்றம் தொடங்கி மாகாணசபைகள் வரையான அனைத்து உறுப்பினர்களையும் சந்தித்துத் அவர்களது கருத்துக்களையும் கேட்கவுள்ளோம் என திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மக்களின் கருத்துக்களையும், முறைப்பாடுகளையும் ஆராய்ந்து அதற்கேற்ற விதத்தில் புனரமைப்புப்பணிகளை மேற்கொண்டு இன்னும் ஆறு ஏழு மாதங்களில் கட்சியைப்பலப்படுத்தித் தற்போதைய [illegible] பக் கவிழ்த்துப் பு[illegible] றை நியமிக்கவுள்[illegible] திய அரசு பதவியேற்றதும் அடுத்த சனாதிபதிப் பதவிக்கான வெற்றியில் பிசகு ஏற்படாது எனவும் ரணில் சனாதிபதியாகப் பதவி யேற்று மாகாணசபைகளுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்து மாகாண சபைகளை ஐ.ம.சு. முன்னணியிடமிருந்து கைப்பற்றி விடுவார் எனவும் இந்தக் கூட்டணி அரசுக்கு வாக்களித்துவிட்டு இன்னற்படும் கிராமிய மக்களை ஐ.தே.கட்சி வென்றெடுக்கும் வழிகளைக் கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிக்கும என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## புத்தர் சிலையை உடைத்து புதைபொருள் திருடிய புத்தபிக்கு கைது

(கொழும்பு)

சரித்திரப்புகழ் பெற்ற மாத்தளை அலுவிகாரையில் உள்ள பௌத்த விகாரையின் முக்கிய புத்தர் சிலைகளை உடைத்து அதனுள் இருந்த விலை மதிக்க முடியாத புதைபொருட்களைக் களவாடிச் சென்ற பௌத்த பிக்கு ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த மற்றொருவரையும் கைது செய்துள்ள பொலிசார் சிலாபம் நாத்தாண்டியா பகுதியைச் சேர்ந்த மேலும் நால்வரை தேடி வருகின்றனர்.

### சிறுவர் இல்ல விளையாட்டுப்போட்டி

தேறாங்கண்டல் துணுக்காயிலுள்ள கலைமகள் சிறுவர் பூங்காவின் பதினோராம் ஆண்டு நிறைவையொட்டி விளையாட்டுப் போட்டிகள் இன்று பூங்கா மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கு நடை பெறவுள்ளதென சிறுவர் இல்ல ஆசிரியர் அறியத்தந்துள்ளார்.

## 03ஆம் ஆண்டு நினைவுநாள்



### மேஜர் விசு

நடராஜா சூரியகுமார், (கண்ணன்)
கரவெட்டி, நெல்லியடி

| | |
|---|---|
| *தாயின் முத்தாக* | *மண்ணின் வித்தாக* |
| *14. 04. 1973* | *19. 06. 2001* |

உன் வரவு தமிழினத்தின் விடிவிற்கே விதையாச்சு
களமுனை கண்டு படை நகர்த்தி மண் மீட்டு நின்றீர்!

எல்லை தனில் நின்று எரி மலையாய் வெடித்த விசு
தண்ணிமுறிப்புப் பகுதியிலே இத்தரணிக்காய் சுடரானாய்!

எம் விழி தேடும் விடியலுக்கு விதையாகிப் போனவனே விசு
உந்தன் கல்லறையில் உன் கனவு பலிக்குமன்றோ!

உன் பிரிவால் துயருறும்
உன் பெற்றோர், கரிகரன் (போராளி),
சுசீலாக்கா குடும்பத்தினர்.

(4713)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 01 - 1945



மறைவு 20 - 05 - 2004

### அமரர் திரு.நடராசா விக்கினராசா அவர்கள்

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி. சியாமளா உதயசங்கர் அவர்களின் அன்புத் தந்தையார் திரு. ந.விக்கினராசா அவர்கள் இறையடி சேர்ந்த 31ஆம் நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக் காகப் பிரார்த்திப்பதோடு, இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் பங்குகொள்கின்றோம்.

ஆசிரியர் ஒன்றியம்
கிளி/கிளிநொச்சி ம.வி.
கிளிநொச்சி.

(சி.9726)

## விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## கிளைமுகாமையாளர், விற்பனையாளர், எழுதுனர் பதவிகளுக்கான விண்ணப்பம் (தற்காலிகம்)

**கிளி/முல்லை. மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. (சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)**

மேற்படி சங்கத்தால் கிளை முகாமையாளர், விற்பனையாளர், எழுதுனர் பதவிகளுக்கான தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், விசுவமடு" என்ற முகவரிக்கு 2004-06-28ஆம் திகதி ந.ப.12.00இற்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாகவோ, அன்றி நேரடியாகவோ கிடைக்கக்கூடியதாக, தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

### 1. கிளை முகாமையாளர் பதவி-ஆண்கள்

**பதவிக்குறியீடும், சம்பளக்குறியீடும் - 208/14 (31/97)**

**கல்வித்தகைமை :-**

அ) கூட்டுறவுப்பணிப்பாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது"

ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சா/த) பத்திரம்/க.பொ.த.(சா/த)த்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம், வர்த்தக கணிதம், தூயகணிதம், சிங்களம், தமிழ் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது :- 18-40 வருடங்கள்**

### 2. விற்பனையாளர் பதவி - ஆண்கள்

**பதவிக்குறியீடும், சம்பளக்குறியீடும் 308/17 (31/97)**

**கல்வித்தகைமை :-**

அ) கூட்டுறவுப்பணிப்பாளர் கனிஷ்ரபிரிவுப் பரீட்சையில் சித்தி

"அல்லது"

ஆ) எட்டாம் வகுப்பு சித்தியுடன் விற்பனைத்துறையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

**வயது :- 18 - 40 வருடங்கள்**

### 3. எழுதுனர் பதவி

**பதவிக்குறியீடும், சம்பளக் குறியீடும் - 302/15 (31/97)**

**கல்வித்தகைமை :-**

அ) கூட்டுறவுப்பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

"அல்லது"

ஆ) க.பொ.த.(சா.த) த்தில் கணிதம், வர்த்தக எண்கணிதம், எண்கணிதம், தமிழ், சிங்களம் ஆகிய பாடங்கள் உட்பட ஐந்து திறமைச்சித்திகளுடன் கூடிய ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது :- 18 - 40 வருடங்கள்.**

**குறிப்பு :-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்திக் கடமையைப்பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும்.

தலைவர்,
விசுவமடு விவசாயிகள்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
விசுவமடு.

(சி-9846)

## வீரவணக்கம்

## 03 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகளில்

தாயின் மடியில் 08 - 08 - 1978



தாயக மண்ணில் 19 - 06 - 2001

தமிழீழ தேசியத் துணைப்படைவீரர்
**து.தேவகுமார்**
நி.மு. யாழ்.மாவட்டம்
த.மு. 50 வீட்டுத்திட்டம்
பாஸ்கரன் குடியிருப்பு,
ஆலங்குளம், துணுக்காய்.

மணலாற்றுப் பகுதியில் 19.06.2001 அன்று சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்த இம்மாவீரர்களுக்கும், இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக் கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்'

தாயின் மடியில் 12 - 08 - 1979



தாயக மண்ணில் 19 - 06 - 2001

தமிழீழ தேசியத் துணைப்படைவீரர்
**அ.விஜயகுமார்**
நி.மு. யாழ்.மாவட்டம்
த.மு. சாந்தா குடியிருப்பு,
பிரமந்தனாறு,
விசுவமடு.

(4710)

# பெற்றோலியப் பொருட்களின் விலையுயர்வை உடன் மீளப்பெற இடதுசாரிகள் நிர்ப்பந்தம்

### மாற்றத்தை ஏற்படுத்தக் காங்கிரஸ் மறுப்பு

(புதுடில்லி)

**பொற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதைத் திரும்பப் பெற வேண்டும் என்று மன்மோகன்சிங் அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

இந்தக் கோரிக்கையினை இடதுசாரிக் கட்சிகள் முன்வைத்துள்ளன. ஆனால், விலையுயர்வைத் திரும்பப் பெறுவதற்கு வழிவகைகள் எதுவுமில்லை என்று பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் கூறியுள்ளார்.

பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு என்பனவற்றின் விலைகளை மீண்டும் பரிசீலனை செய்யுமாறும், அவற்றைத் திரும்பப் பெறுமாறும், இடதுசாரிகள் நேற்று மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

அண்மையில் மத்தியரசு மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய பெற்றோலியப் பொருட்களின் விலைகளை உயர்த்தியிருந்தது.

விலை உயர்வைத் திரும்பப் பெறுமாறு இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி, நிதியமைச்சர் சிதம்பரம் ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால், டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர்ஐயர், தங்கள் அரசு பின்வாங்கும் அரசல்ல என்றும் விலை உயர்வைத் திரும்பப் பெறும் பேச்சிற்கே இடமில்லை என்றும் கூறியுள்ளார்.

## 20,654முறைப்பாடுகள்

(சென்னை)

தமிழகத்தில் வாக்காளர்களின் பெயர் நீக்கம் தொடர்பாக 20 654 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன..

இதனைத் தமிழக தேர்தல் அதிகாரி சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

## வாக்காளர் இடாப்பில் மோசடி; சென்னையில் விசாரணை ஆரம்பம்

(சென்னை)

தமிழக வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் கேரளத் தேர்தல் ஆணையாளர் நேற்றுச் சென்னையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

தேர்தல் ஆணையகம் தமிழக வாக்காளர்கள் நீக்கப்பட்டது தொடர்பாக விசாரணை செய்யக் கடந்த சில தினங்களுக்கு முதல் கேரளாவின் தேர்தல் ஆணையாளர் தோமஸை நியமித்தது.

கன்னியாகுமரி, மதுரை மாவட்டங்களில் விசாரணைகளை முடித்துள்ள தேர்தல் ஆணையாளர் நேற்றுச் சென்னையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். இவர் பொதுமக்களின் குற்றச்சாட்டுக்கள் மீதும் விசாரணை களை மேற்கொள்வார். ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் இவர் தனது அறிக்கையைத் தேர்தல் ஆணையகத்திடம் கையளிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமரின் வேண்டுகையையடுத்து காவிரியில் தண்ணீர் திறப்பு

(பெங்களூர்)

பிரதமர் மன்மோகன்சிங்கின் வேண்டுகோளையடுத்து நேற்று காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாக கர்நாடக முதலமைச்சர் தரங்சிங் கூறியுள்ளார். காவிரியிலிருந்து உடனடியாகத் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு பிரதமர் மன்மோகன்சிங் கேட்டுள்ளதால், இதுபற்றிப் பரிசீலித்த பின்னர் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இவ்வாறு நேற்றுக் கர்நாடக முதலமைச்சர் தரங்சிங் பெங்களூரில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

காவிரியில் எவ்வளவு தண்ணீர் இருக்கின்றது என்று பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு தாம் விளக்கிக் கூறியுள்ளதாகவும், ஆனால் எவ்வளவு தண்ணீர் திறந்துவிடுவது என்பது பற்றிப் பிரதமருக்கு உறுதிமொழி எதுவும் வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தினையடுத்தே பிரதமர் தம்முடன் தொலைபேசியில் காவிரி நீரைத் திறந்து விடுமாறு கேட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

## குஜராத் முதலமைச்சர் கொலை முயற்சி ; கொல்லப்பட்டோர் தீவிரவாதிகள் அல்ல!

### விசாரணைக்கு மகாராஷ்டிர அரசு உத்தரவு

(புதுடில்லி)

குஜராத்தின் முதலமைச்சர் நரேந்திரமோடியைத் தீவிரவாதிகள் கொலை செய்ய முயன்றதாக அகமதாபாத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட நான்கு பேரும் தீவிரவாதிகளல்ல என்றும், குஜராத் அரசு கூறியது பொய் என்றும், இதனைத் தீவிர விசாரணைக்குட்படுத்துமாறும் மகாராஷ்டிரவ முதலமைச்சர் சுசில்குமார்ஷின்டே நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் பெண் உட்பட இருவர் மகாராஷ்டிராவிலிருந்து வந்த தீவிரவாதிகள் என்று குஜராத் அரசு கூறியிருந்தது.

ஆனால் தீவிரவாதியென்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ள பெண் மும்பையைச் சேர்ந்த கல்லூரி மாணவி என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவர் தீவிரவாதி என்று கூறுவதற்கு எதுவித ஆதாரங்களும் இல்லை என்றும் மகாராஷ்டிராப் பொலிசார் கூறியுள்ளனர்.

இதனையடுத்தே மகாராஷ்டிரா முதலமைச்சர் தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். குஜராத்தில் நரேந்திரமோடியின் செல்வாக்குச் சரிந்து வருவதால் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக நரேந்திரமோடி இவ்வாறான நாடகத்தை நடத்தியுள்ளதாகக் குஜராத் மாநில முன்னாள் முதல்வர் அமர்சிங் சௌத்திரி கூறியுள்ளார். ஆனால் குஜராத் அரசு இவற்றுக்கு மறுப்புக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

## 21-27 ஆனி 2004

கண்ணிவெடி விழிப்புணர்வினை சமுதாய மட்டத்தில் எடுத்துச் செல்லும் பணிகளின் சிறப்பு அம்சமாக எதிர்வரும் 21ஆம் திகதி திங்கள் தொடக்கம் 27ஆம் திகதி ஞாயிறு வரை கண்ணிவெடி விழிப்புணர்வு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிறந்த முறையில் அனுஷ்டிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வெண்புறா நிறுவனம் தனது பத்து தொடர்பகங்கள் மூலமாக வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் இந்நிகழ்வினை நடாத்துவதற்கு ஆயத்தமாகி வருகின்றது. வீதி நாடகம், பதாதைகள், வாகனக் கொடிகள், சுவரொட்டிகள், ஒலிபரப்புச்செய்திகள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் முதலியன இதன் பிரதான ஊடகங்களாகப் பயன்படுத்தப்படவுள்ளன.

தயவுசெய்து எமது மக்களின் சுய பாதுகாப்புக்கருதி அக்கறையுடன் சகல தரப்பினரையும் எமது மனிதநேய செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

-: விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம் :-

யுனிசெவ் வெண்புறா-வன்னி

(சி-9727)

இன்று கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெறும் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லை. கல்வி வலயம்)

# உயர்திரு. கந்தையா சரவணபவன் அவர்களின்

# பணிநயப் பாராட்டுச் சிறப்பிதழ் - 19.06.2004

## வன்னி மண் தந்த முத்தமிழ் வித்தகன்



திரு.க.சரவணபவன்
(பி.க.பணிப்பாளர்,
முல்லைவலயம்)

முத்தமிழ் கலந்த வித்து
மூத்த தமிழின் சொத்து
கற்றதை மற்றவர் பெற்றிட
வாய்த்திட்ட எம் தமிழ் முத்து
அறிவுப் பசிதீர்த்து அன்பால் எமை ஈர்த்த
அறிவுக் கடலே பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பா. அபிவிருத்திச் சங்கம்,
மு/இரணைப்பாலை றோ. க. ம. வி.,
புதுக்குடியிருப்பு.

(சி-9928)

## உளம் நிறைந்த வாழ்த்துக்கள்



முல்லை மண் ஈன்றெடுத்த முத்தான முத்தே!
மூவேந்தர் தமிழ் காத்த முதல்வனே!
ஈழத்தின் திசையனைத்தும் வாழ்வதற்காய்
இதமாகக் கற்பித்த ஆசானே!
ஆசிரியராய் அதிபராய் நிர்வாக சேவகனாய்
அனைத்து உளமதையும் ஆட்கொண்ட வித்தகனே!

ஆயகலைகளிலும் அறிவுமிக்க பெரியோனாய்
அவனியிலே நிகரற்றுத் திகழ்ந்தவனே!
நாமகளை நாவினிலே இருப்பிடமாய்க் கொண்ட
நல் ஆசானே! நாடு போற்ற நீ வாழ்க!
உன் சேவைதனைப் போற்றுகின்றோம்
உளம் நிறைய வாழ்த்துகின்றோம்!

அதிபர், ஆசிரியர், கல்வி சாரா ஊழியர்கள்,
மு/விசுவமடு மகாவித்தியாலயம், விசுவமடு.

(சி-9927)

## கன்னிக் கவி வரையக் கற்றுத் தந்தவரை....



கன்னிக் கவி வரையக்
கற்றுத் தந்தவரை
வண்ணத் தமிழ் மொழியில்
பற்றை வளர்த்தவரை.

தண்தேன் தமிழ் மொழியில்
வெண்கலக் குரலொலியில்
கற்பித்து எம்மை
கற்பிக்க வைப்பவரை.

பிரணவத்தின் பொருள் சொன்ன
முருகனது மறு பெயரை
சரவண பவன் என்று
பொருத்தமுறப் பெற்றவரை.

குருவாகி எம்மை
கு(உ)ருவாக்கிய எம் குருவை
கருவாக கொண்டு
ஒரு கவி வரைய எத்தனித்தேன்

இலக்கண அழகொளிர
இலக்கிய நயமிளிர
ஒழுக்கமே விழுப்பம் தருமெனும்
வள்ளுவன் பொருள் விளக்க.

நலம் தந்த நல்லாசானின் - சேவை
நலம் பாராட்ட வார்த்தை உண்டோ?
விலையில்லாக் கலை தந்து
நிலை வாழ்வைப் பெற்றவரே.

யூன் இருபது தன் வாழ்நாளை.
வீண் ஆக்கா மாமனிதனது.
சேண் உயர் சேவை தன்னை
வான் உயர வாழ்த்தி நிற்க.

வன்னிப் பள்ளிகளில் - உங்கள்
மாணவர் நாம்
கன்னித் தமிழ் வளர்க்க
மாண்புடனே நிலை பெறுவீரையா.

மாணவி
திருமதி சூரியகாந்தி ஜெயராஜா,
அதிபர், தமிழ்ப்பாட ஆசிரியர்.
மு/செம்மலை ம.வி.செம்மலை

(சி-9926)

## இமயம் நீ



ஓ..........சரவணபவ
இமையம் நீ............
ஆசானாய், அதிபராய்...
அதிகாரியாய், கலைஞனாய்
கல்விப்பாதையில்
களம்பல கண்டு
அத்தனைக்கும்.............
அகராதி படைத்திட்டாய்.

ஓ.......... சரவணபவ
இமயம் நீ
பிறப்பினால் பெருமை வரா
செய்கையே சிறப்புத்தரும்
யாம் கற்றதை ஏடுகளில்
கண்டோம் உன் செயல்களிலே.

ஓ.........சரவணபவ
வந்ததில்லை எம்முன்னே இமயமது
சென்றதில்லை நாமும் அதனிடத்தே
ஆனாலும்......................கற்றதனால்
உன்னிடத்தில் கண்டு விட்டோம்
இமயமென்று களிக்கின்றோம்.

ஓ.............சரவணபவ
வித்தகனாய் எம்மண்ணில்
வீறு நடை போட்டீரே
சத்தியமாய் நம்பமனம்
மறுக்குதையா உம் ஓய்வதனை
ஆனாலும்................
நித்தியமாய் நின்சேவை நீண்நிலத்து
நீடித்து நிலைத்திருக்க
நிமலனை நிதம் வேண்டி

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர், பணியாளர், பா.அ.சங்கம்
மு/உடையார்கட்டு ம.வீ.

(சி-9925)

## மு/ புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் திரு.க. சரவணபவன் அவர்களின் கல்விச் செயற்பாடு



திரு.க.சரவணபவன்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர். முல்லை - கல்வி வலயம்)

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றாவாகிலும் நனிசிறந்தனவே என்பதற்கிணங்க, பிறந்த மண்ணின் விருட்சமாக விளங்கும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் கல்வியை வளர்க்க இவர் அரும்பாடுபட்டார். உயர் வகுப்பு கலைத்துறை மாணவரின் கல்வி நிலை கண்டு அவர்களுக்கு வரலாறு, தமிழ், பொருளியல் ஆகிய மூன்று பாடங்களையுமே ஒருங்கே கற்பித்து பெருமை தேடித்தந்த பேராசானாகத் திகழ்ந்தார்.

வன்னியின் வரலாறு கண்ட வரலாற்று மன்னன். வரலாறு, ஈழத்துவரலாறு, ஐரோப்பிய வரலாறு என உலக வரலாற்றை மாணவர்களிடையே உணரவைத்த பேராசான்.

அவர்கற்பித்த காலத்தில் ஆரம்பித்த பொருளியல் பாடம், இன்று, வர்த்தகப் பிரிவு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்க வழி சமைத்துக் கொடுத்தது எனலாம்.

இந்தவகையில் 1976 ஆம் ஆண்டு 16 மாணவர்களுக்கு மூன்று பாடங்களை தானே கற்பித்து நான்குபேரை முதல்முறையாகவே பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிய பெருமை அவரைச்சாரும்.

தொடர்ந்தும் 1983 வரை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்கு கல்வி கற்பித்துப் பல மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிய செயலினால் இன்று, தமிழ்த்துறை, வரலாற்றுத்துறை, பொருளியற்துறை என பல்துறைசார்ந்த சிறப்புப் பட்டம் பெறும் மாணவர்களையும் பல துறைகளின் சிறப்பாளர்களாக விளங்கும் மாணவர் பரம்பரையை உருவாக்கிய மூதறிஞர் எனலாம்.

28-04-1985 வரை பு.ம.வியில் தனது பணிக்காலத்திலேயே 80 களில் யாழ் பல்கலைக் கழகத்திற்குச் சென்று கல்வி டிப்ளோமாப் பாடநெறியை இவர் பயின்றார்.

1985இன் பின் செம்மலை ம.வி. அதிபராக கடமை ஏற்று, அங்கும் தனது அதிபர் பதவியுடன், கல்விப் பணியிலும் அரும் பாடுபட்டு உழைத்து, செம்மலை மக்களுக்கோர் செம்மலாகத் திகழ்ந்தார்.

அளம்பில் பகுதியின் கொத்தணி அதிபராக 1988இல் கடமையேற்று 1992 வரை அக்கொத்தணியின் கீழ் உள்ள பாடசாலைகளின் வளவாளராகத் திகழ்ந்தார். இக்கால கட்டத்தில் 1989 இல் நடைபெற்ற அதிபர் தரம் 1 போட்டிப் பரீட்சையில் சித்தியும் பெற்றார்.

மேலும் 1.11.1992 ஆம் ஆண்டு முல்லை வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்று. வன்னியின் வரலாறு, கூத்து, மரபு பேணும் வகையிலும் பல செயற்பாட்டினை இவர் மேற்கொண்டார். அதனடிப்படையில் அவரால் எழுதப்பட்டதே "வன்னியின் பண்பாட்டுக் கோலங்கள்" என்ற கட்டுரையாகும் . அந்தக் காலகட்டத்தில் முல்லை வலய ஆசிரியர்களின் கல்வி மேல் அக்கறை கொண்டு பட்டபின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கான நிலையம் ஒன்றினை தனது தலைமையில் 1993 இல் ஆரம்பித்துவைத்து பல ஆசிரியர்களைப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற வழிசமைத்துக் கொடுத்தார்.

மேலும் 1998 ஆம் ஆண்டு பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையேற்ற அவர் தனது கல்விப்பணியினூடாகத் தனது வலயத்துக் குட்பட்ட ஆசிரிய மாணவர்களுக் கிடையிலான புதிய கலைத்திட்ட கணிப்பீடுதொடர்பான பிரச்சினைகள், செயற்திட்டங்கள் போன்ற கலைத்திட்ட செயற்பாட்டினை உரியமுறையில் நடைமுறைப்படுத்தி முல்லை மாவட்டத்தின் கலைத்திட்ட வளர்ச்சி செவ்வனே இயங்க வழிவகுத்தார்.

இந்த வகையில் ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக கல்விப் பணியில் ஈடுபட்ட சரவணபவன் அவர்கள் தம்பணியில் பல இடர்களையும் பேர் இழப்பினையும் சந்தித்த போதும் தம் பணியை முழுமையாக நிறைவேற்றி ஓய்வு பெறுவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடையும் இவ் வேளையில் அவர் தனது ஓய்வு பெறும் காலத்தில் சகல குடும்ப நலன்களும் பெற்று குடும்பத்தாருடன் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் முல்லைவலயமும் , புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயமும் என்றும் அவரது சேவையை நினைவு கூர்ந்து வாழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

அதிபர்,
ஆசிரியர்கள்,
மு/புதுக்குடியிருப்பு. ம. வி.

(சி-9924)

இன்று கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெறும் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லை. கல்வி வலயம்)

# உயர்திரு. கந்தையா சரவணபவன் அவர்களின்

# பணிநயப் பாராட்டுச் சிறப்பிதழ் - 19.06.2004

## முல்லை. மாவட்டத்தில் முதிர்ந்த கல்விமான்

சொல்லும் செயலும் என்றும் ஒன்று
அல்லும் பகலும் கல்விக்காய் விழிப்பு
சொல்லும் பாட்டும் கற்பித்தல் கேட்டால்
நல்லோர் வரிசையில் நாடே மதிக்கும்
எல்லாச் சிறப்பும் கொண்ட சரவணரை
பல்லாண்டு வாழப் பணிவுடன்
வேண்டுகிறோம்.



**திரு.க.சரவணபவன்**
(பி. க. பணிப்பாளர், முல்லைத்தீவு)

**அதிபர், ஆசிரியர்கள்**
**கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்**
**வள்ளிபுனம்.**

(சி-9922)

## ஓய்வுபெறும் கலைக்கோயிலுக்கு இதயசுத்தமான வாழ்த்துக்கள்



**திரு.க.சரவணபவன்**
(பிரதிக்கல்விப் பணிப்பாளர். முல்லை - கல்வி வலயம்)

★கல்வி தந்த கலைக்கோயில்
★நீதி தந்த நீதிபதி
★நிர்வாகம் சொன்ன நிர்மலன்
★கலை வளர்த்த காவலன்
★பாடவைத்த புரவலன்
★ஆட்டிவைத்த அண்ணாவி
வாழ்த்தி வணங்குகிறோம்.

**சீடர்கள்**
சி. சுப்பிரமணியேஸ்வரன் (அதிபர். பாரதிவித்தியாலயம்,)
செ.ரவீந்திரராசா (அதிபர் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்.)
இ.செல்வநாயகம் (அதிபர் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயம்)



## ஓயாதசேவைதனை ஓயும் நாளில் வாழ்த்துகின்றோம்

ஆசற்ற ஆசானாய் அன்புடைய அதிபராய்
மாசற்ற அதிகாரியாய் மதிப்புடன் கண்டோம்
ஓயும் அவர் சேவையில் ஓயாத சேவைதனை
ஆயும் போது நாம் ஆங்காங்கு காண்கின்றோம்
தூய எம் குருகுலமே தூமணியே நாமணியே
ஆயகலை வல்லியென்று அன்புடன்
வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
விக்கினேஸ்வராவித்தியாலயம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

(சி-9921)

## மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய வளர்ச்சியில் திரு. க. சரவணபவன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி வலயம், முல்லைத்தீவு) அவர்களின் பங்கு அளப்பரியது

பாடசாலையின் மாணவனாக, ஆசிரியராக பள்ளியை நிர்வகிக்கும் அதிகாரியாக இருந்து இன்று ஓய்வு பெறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.க. சரவணபவன் அவர்களின் சேவைகள் மீட்கப்பட்டு பாராட்டப் படவேண்டியன. பிறந்த ஊர், கற்ற கூடமென்று மதித்து தன்னை, தனது திறனைப் பூரணமாக அர்ப்பணித்து பாடசாலையை வளர்த்த கல்விமான்களில் போற்றுதற் குரியவர்களுள் திரு.க.சரவணபவன் அவர்களும் ஒருவர்.

- ☆ நல்லதோர் கடமையாளன்
- ☆ நலமான தமிழ் ஆசான்
- ☆ வல்லதோர் வரலாற்று ஆசிரியர்
- ☆ வாண்மையுடைய பொருளியல் ஆசான்
- ☆ கண்ணியமான கலைஞர்.

அவரது இத்தனை திறன்களாலும் எமது பள்ளி பிரகாசித்தது. அதற்கு அக்கால பல்கலைக்கழக அனுமதியும், இன்று பல்லாயிரம் சீடர்களை உயர் நிலைப் பதவிகளில் காண்பதுவும் நற் சாட்சியங்களாகும். இவைமட்டுமல்ல வடமோடி நாட்டுக் கூத்தில் சாதனை செய்து, ஒரு பரம்பரையை உருவாக்கி, அவர்கள் சிறப்புக் கண்டு இன்று பூரிப்படைவதும் நல்லதோர் மீட்கும் விடயமாகும். திட்டமிட்டுக் கற்பிப்பதில் மட்டிடமுடியாத மாமனிதன். எதையும் நயந்து, நயக்கும் வகையில் சுவையுடன் கற்பித்த விடயங்கள் இன்றும் குலையாமல் உண்டு என்றால் அவரது கற்பித்தல் யுத்தியே அதற்குக் காரணமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை.



எமது பள்ளியிலிருந்து இடம் மாறி செம்மலை மகாவித்தியாலயத்துக்கு அதிபராகச் சென்ற வேளையிலும், முல்லை. மாவட்டக் கல்விப் பணிமனையில் உதவிக்கல்விப் பணிப்பாளராக இருந்த வேளையிலும் , முல்லைக் கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய வேளையிலும் எமது பாடசாலைக்கும், பழைய மாணவர்களாகிய எமக்கும் ஆற்றிய பணிகள் என்றும் நினைவில் நீங்காது.

- ☆ உயர்தர மாணவர்கட்கு விசேட வகுப்பு நடாத்துதல்
- ☆ போட்டிப் பரீட்சைக்கு விசேடவகுப்புக் களை நடாத்துதல்
- ☆ பட்டப்பின் படிப்புக் கற்கை நெறிக்கு சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமை யாற்றியமை
- ☆ கல்வி மாணிப் பட்டக் கற்கை நெறிக்கு விரிவுரையாளராகக் கற்பித்தமை
- ☆ பாடசாலை வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்குதல்
- ☆ பொன்விழாச் செயற்பாட்டுக் குழுவில் இணைச்செயலர்களில் ஒருவராகவும், மலர்க்குழுத் தலைவராகப் பணிபுரிதல்

அவற்றுள் சிலவாகும்.

பாடசாலையின் பழைய மாணவர்கட்கு குலமுதல்வனாக இருந்து பாடசாலையை இன்றுவரை வளர்த்துவரும் கல்விமானின் ஓய்வு நாளில் நாம் அனைவரும் இதய சுத்தியுடன் ஒன்று கூடுகிறோம். அவர் சேவை, சாதனையைப் பாராட்டுவதுடன் எம் பாடசாலையின் வளர்ச்சியில் என்றும் விழிப்புடனிருக்க அன்புடன் வேண்டுகின்கிறோம்.

**பழையமாணவர் சங்கம் மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்**

(சி-9920)

# யூரோ-2004 கால்பந்து சுற்றுப் போட்டி

## இங்கிலாந்துக்கு முதல் வெற்றி; மற்றுமொரு போட்டியில் நடப்பு சம்பியன் பிரான்சை சமன் செய்தது குரோசியா



போர்த்துக்கல்லில் நடைபெற்று வரும் யூரோகிண்ண கால்பந்தாட்ட சுற்றுத்தொடரின் கால்இறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் நம்பிக்கையை இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்து அணியை தோற்கடித்ததன் மூலம் தக்கவைத்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற குழு B போட்டி ஒன்றில் இங்கிலாந்து அணி சுவிற்சர்லாந்து அணியை எதிர்கொண்டது.குழுBக்கான குரோசியாவுக்கும், பிரான்சிற்கும் இடையிலான மற்றுமொரு போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இங்கிலாந்து அணிக்கும் சுவிற்சர்லாந்து அணிக்கும் இடையிலான போட்டி போர்த்துக்கல்லின் கொயின்ரோ நகரில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் எதிர்பாராத வகையில் சுவிற்சர்லாந்தின் ஆதிக்கமே ஆரம்பத்தில் நீடித்தது. எனினும் போட்டியின் 23ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் 18 வயது நிரம்பிய முன்வரிசை ஆட்டக்காரர் கொயின்ரோனி கோல் ஒன்றைப் போட்டு இங்கிலாந்து அணியையும், ரசிகர்களையும் உற்சாகப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து போட்டியின் 75ஆவது நிமிடத்தில் கொயின்ரோனி மற்றுமொரு கோலைப் போட்டு இங்கிலாந்து அணியை 2-0என்ற நிலையில் முன்னிலையில் நிறுத்தினார்.போட்டியின் 82ஆவது நிமிடத்தில் ஸ்ரீபன் ஜெராட் அடித்த கோலின் மூலமாக இங்கிலாந்து அணி 3-0என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது.

குரோசியாவுக்கும், பிரான்சிற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் போட்டிஆரம்பமானது தொடக்கம் இறுதிவரை ஆக்ரோசமாக மோதியபோதும் கோல் பெறும் பலசந்தர்ப்பங்களை கோல் காப்பாளர்களின் அபாரதிறமையினால் இழந்தன.முதல் சுற்றுப்போட்டியில் இங்கிலாந்து அணியை அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளாக்கிய பிரான்ஸ் அணி இப்போட்டியிலும் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை தென்பட்ட போதும் குரோசிய வீரர்களின் திறமையான நிதானமான ஆட்டத்தால் நம்பிக்கை பொய்த்துப்போனது. இதன் மூலம் குழுBயில் இங்கிலாந்து, பிரான்ஸ் அணிகள் ஒவ்வொரு வெற்றியுடன் முன்னணியில் திகழ்கின்றன.

இதேவேளை கடந்த புதன்நள்ளிரவு நடைபெற்ற ஐந்தாம் நாள் போட்டியில் குழுAயில் கிறிஸ் ஸ்பெயின் அணிகள் தமது இரண்டாவது லீக் போட்டியில் ஒன்றை ஒன்று சந்தித்தன.



பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஸ்பெயின் அணிவீரர்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி28ஆவது நிமிடத்தில் கோல்ஒன்றைப் போட்டு முன்னணியில் திகழ்ந்தனர். இதன் பின் தற்காப்பு ஆட்டத்தையே ஸ்பெயின் அணியினர் கைக்கொண்டனர்.

இதனை இலாவகமாக பயன்படுத்திய கிறிஸ்அணி வீரர்கள் 63ஆவது



நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டு போட்டியை சமன் செய்தனர். இதனை அடுத்து ஸ்பெயின் வீரர்கள் கோல் அடிப்பதற்கு முழு வேகத்துடன் செயற்பட்ட போதும் ஏமாற்றத்தையே கண்டனர்.

குழு A க்கான மற்றுமொரு போட்டியில் போட்டியை நடாத்தும் போர்த்துக்கல் அணியும், ரஷ்ய அணியும் ஒன்றை ஒன்று மோதின. இது இரு அணிகளும் முதல் லீக்போட்டியில் தோல்வி கண்டிருந்தமையால் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

போட்டியின் முக்கியத்துவம் கருதி இருஅணிகளும் அபாரமாக விளையாடின. இதுபோட்டியின் ஏழாவது நிமிடத்தில் போத்துக்கல்லுக்கு கோல் ஒன்றை பெற்றுக்கொடுத்தது. இதனை அடுத்து போட்டியின் 47ஆவது நிமிடத்தில் ரஷ்ய கோல் காப்பாளர் ஒவ்கிளிக்கோவ் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்ட துயரம் நிகழ போர்த்துக்கல் 88ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் போட்டு 2-0என்ற நிலையில் வெற்றி பெற்றது.

### இங்கிலாந்து ரசிகர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

ஐரோப்பிய கிண்ண கால் பந்து போட்டியின் போது வன்முறையில் ஈடுபட்ட இங்கிலாந்து ரசிகர்கள் போர்த்துக்கல் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டு சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

உலகம் முழுவதிலும் உள்ள கால்பந்து ரசிகர்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஐரோப்பிய கால்பந்துப் போட்டிகள் போத்துக்கல் நாட்டில் நடைபெற்று வருகின்றன.முதலாவது லீக் போட்டியில் பிரான்ஸ் அணியிடம் இங்கிலாந்து தோல்வி அடைந்ததால் ஆத்திரமடைந்து கலவரத்தில் ஈடுபட்ட இங்கிலாந்து ரசிகர்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

### வாய்ப்பை இழந்த ஜெய்ஜெய் ஒகாசா

நைஜீரிய கால் பந்தாட்ட அணியின் தலைவரான ஜெய் ஜெய் ஒகாசா அங்கோலாவில் நடை பெறும் உலகக் கிண்ணப் போட்டிக ளுக்கான தகுதிகாண் கால்பந்துப் போட்டிகளில் பங்கேற்க முடியாது போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாளை நடைபெறும் போட்டிக்குச் செல்ல பாரிசில் குடும்பத்தினருடன் விடுமுறையைக் கழிக்கும் அவர் அங்கிருந்து செல்வதற்கான விமானம் கிடைக்காமையே காரணம் எனக் கூறப்படுகிறது.

எனினும் நைஜீரிய அணியின் ஏனைய வீரர்கள் அனைவரும் அங்கு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இப்போட்டிகளில் பங்கேற்கும் பாரி ஸின் சென் ஜெர்ஸமன்கழக வீரர் பார்தலமியூ ஒக்பிச்சி காயங் காரணமாக திருப்பியழைக்கப் பட்டுள்ளார்.

## நான் ஒரு அப்பாவி விளையாடும் சக்தியைக் கடவுள் தந்துள்ளார்



சிட்னி ஒலிம்பிக்போட்டியில்5 பதக்கங் களை வென்று சாதனை படைத்த அமெரிக்காவின் ஜோன்ஸ் மரியன் மீண்டும் தான் நிரபராதி என்பதை உலகுக்குக் காட்ட முயன்று வருவதாகத் தெரியவருகிறது. தன்னை ஒரு அப்பாவி என்று கூறியுள்ள மரியன் கடவுள் எனக்கு விளையாடும் சக்தியைக் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். தமது நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்வதைத்தவிர வேறு ஒன்றும் தேவையில்லை என்று கூறியதுடன் விரும்பினால் தன்னை நிரபராதி என்று செனட் சபையின் முன்னால் மக்களுக்கு அறிவிக்க முடியும் என்றும் கூறியுள்ளார். அவர் தான் போட்டிகளின் போது ஊக்கமருந்தை பயன்படுத்தவில்லை என்றார்.

இவர் முன்னரும் நவம்பர் மாதம் தனது சகாவுடன் இணைந்து தான் ஊக்கமருந்து பாவனையில் ஈடுபடவில்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'துஸ்ரா' பந்து வீச்சு பரிசோதனையில் தவறுகள் அவுஸ். பல்கலைக்கழக நிபுணர்கள் தெரிவிப்பு



முத்தையா முரளிதரனின் 'துஸ்ரா' பந்து வீச்சுத் தொடர்பாக நடத்தப்பட்ட பரிசோதனைகளில் தவறுகள் இருப்பதாக தெற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழக நிபுணர் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து சர்வதேச ஊடகங்களுக்கு நிபுணர்கள் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். முரளிதரனிடம் பரிசோதனை நடத்தப்பட்ட விதம் தொடர்பாக ஆராய்வதற்கென தமக்குள்ள உரிமையின் அடிப்படையிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாக இவர்கள் கூறியுள்ளனர்.

பேராசிரியர் ஒஸ்ரிநில்கோ தலைமையிலான இந்தக் குழுவில் உயிரியல் விஞ்ஞானம்,பொருளியல், மற்றும் பௌதீகவியல் போன்ற துறைகளில் உள்ள நிபுணர்கள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தப் பரிசோதனையில் தவறுகள் இருப்பது விஞ்ஞான ரீதியாக நீரூபிக்கப்பட்டுள்ளது.

கிளையாக வைக்கப்பட்ட அலுமினியம் கட்டைகள் ஒட்டப்பட்ட




அளவுக்கும் முரளியின் கையில் ஒட்டப்பட்ட 'ஸ்ரில்' அளவுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.

இதேபோன்று பரிசோதனை மூன்றாம், நான்காம் கட்டங்களில் தவறுகள் காணப்படுகின்றன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து முரளி தெரிவிக்கையில்

எல்லாப் பரிசோதனைகளுக்கும் நான் மேற்கு அவுஸ்திரேலியாவுக்கே சென்றேன் அங்குதான் அதியுயர் தொழி நுட்பம் காணப்படுகின்றது. சர்வதேச கிரிக்கெட் பேரவை இவர்களின் உயர் தொழி நுட்பத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது என்றார்.

## கிளி.மாவட்டத்தில் கால் பந்து பயிற்சி முகாம்

கிளிநொச்சி மாவட்ட செயலக விளை யாட்டுப் பகுதியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட அணிக்கான சிறப்புப் பயிற்சி கிளிநொச்சி பொது மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு நாள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கான பயிற்றுன ராக ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களின் பயிற்றுனர் (Copaches trainer) திரு.பிரான்சிஸ் சாண்டஸ் கடமையாற்றினார்.. மட் டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இவர் ஒருவரே பயிற்சியாளர்களின் பயிற்றுனராக உள்ள தமிழராவார். இலங்கையில் இவ்வாறான பயிற்றுனர் இவரேயுள்ளார்.

முன்னதாக நேற்றுமுன்தினம் காலை கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவன மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி சு.கனகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. வேதநாயகன் கலந்துகொணடு கருத்துரை வழங்கினார். இந்நிகழ்வில் தமிழீழ விளை யாட்டுத் துறையைச் சேர்ந்த ராஜா, தமிழீழ விளையாட்டுத் துறைச் செயலாளர் திரு. அன்ரன் அன்பழகன் ஆகியோருமு கருத்துரைகளை வழங்கினர். (சோ)





பயிற்சி முகாமில்கலந்துகொண்ட கிளி.மாவட்ட வீரர்களுடன்,பயிற்சியாளர்,விளையாட்டு உத்தியோகத்தர்களையும், அதன்அங்குரார்ப்பண நிகழ்வின் போதும் கலந்துகொண்ட மேலதி அரச அதிபர் வேதநாயகன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## தரத்துக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் இந்திய அணிக்கு வீரர்கள் தெரிவு செய்யப்படும். இந்திய கிரிக்கெட் வாரியம்

இந்திய கிரிக்கெட் அணிக்கு ஒப்பந்த அடிப்படையில் வீரர்களை நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முடிவு செய்துள்ளது.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஆசிய கிரிக்கெட் போட்டிகளுக்கு வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர்.தற்போது இந்திய அணி வீரர்களுக்குபெங்களூரில் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. வரும் 3ஆம் திகதியில் இருந்து உத்தேச இந்திய அணிக்கு சென்னையில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.இப் பயிற்சியின் போது இந்திய வீரர்களை அவர்களின் தரத்துக்கு ஏற்ப மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒப்பந்த அடிப்டையில் அவர்களை அணியில் சேர்க்க கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது.



## சிந்தனைக்கு

இந்த யுத்தத்தில் எமது போராளிகளும் பொதுமக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள், உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற வீர காவியமாகப் பொறிக்கப்பட்டு விட்டது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 19-06-2004



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com


## பேச்சுவார்த்தை மேசைக்கு அப்பால்!

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் ,இனப்பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வை எட்டுதல், நிரந்தரத் தீர்வு காணுதல் என்பது தனியாகப் பேச்சுவார்த்தை மேசையில் அமருதல், பேச்சுவார்த்தைகளை நடத்துதல் என்பதினால் மட்டும் சாத்தியமாகிவிடக் கூடியவிடயமல்ல. ஏனெனில், இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணப்பட வேண்டுமானால் பல வழிகளில் அது முனைப்புப்படுத்தப்படுதல் வேண்டும். அதற்கான சூழல் உருவாக்கப்படுதல் வேண்டும்.

முதலில் சமாதானத்திற்கு ஆதரவான சக்திகளுடன் கூட்டுச் சேருதல் வேண்டும். அதன் மூலம் சமாதானத்திற்கு எதிரான அரசியல் மற்றும் பிற சக்திகளையும் எதிர்கொள்ளத் தயாராக முடியும். புரையோடிப் போய்விட்ட சிக்கலானதும், நீண்ட காலப் பிரச்சினையுமான இப்பிரச்சினையைத் தனித் தரப்பாக நின்று தீர்த்து வைத்தல் என்பது சாத்தியப்பாடானதொன்றாகமாட்டாது. ஆகையினால், சமாதானம் என்ற ரீதியில் ஒன்றிணையக் கூடிய சக்திகளை அணி திரட்டுதல் அவசியமானதாகும்.

அடுத்ததாக, மறுதரப்புடன் – அதாவது, எதிர்த்தரப்புடன் – முரண்பாடுகளைத் தோற்றிவித்தலோ அன்றி முரண்பாடுகளைத் தீவிரமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாது தவிர்த்தலோ அவசியமானதாகும்.ஏனெனில் ஏற்கனவே கூர்மையடைந்துள்ள பிரச்சினையாகவும் சமாதானத்திற்குச் சவால் விடுகின்ற பிரச்சினையாகவும் இருக்கையில், மேலும் புதுப் புதுப் பிரச்சினைகளைத் தோற்றிவித்தலும், பழையவற்றைக் கிண்டிக் கிளறுவதும் சமாதான முயற்சிகளுக்கு ஆரோக்கியமானதொன்றாக இருக்கமாட்டாது.

மேலும், இரு தரப்பும் மறு தரப்பின் உள்விவகாரங்களில் தலையீடாது இருத்தல், அதாவது எதிர்த்தரப்பின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதன் மூலம் அத்தரப்பினை பலவீனப்படுத்தி– இராணுவ ரீதியிலானதோ அன்றி அரசியல் ரீதியாகவோ அன்றிப் பொருளாதார ரீதியாகவோ பலவீனப்படுத்தி –அனுகூலங்களை அடைய முனைதல் பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது.

மேற்கூறப்பட்டவாறு ஒரு தரப்பினரின் உள்விவகாரத்தில் மற்றைய தரப்பு தலையிடாமலும், சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பும் வழங்கப்படும் பட்சத்திலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காண்பதும், இனப்பிரச்சினை போன்ற தீவிரம் பெற்ற பிரச்சினைகளுக்குச் சமாதானத் தீர்வு காணபதும் சாத்தியப்படானதாக முடியும்.

ஆனால், தற்பொழுது ஆட்சியிலுள்ள ஐ.ம.சு.முன்னணி அரசாங்கமும் சரி, சனாதிபதி சந்திரிகாவும் சரி இனப்பிரச்சினை விடயத்தில் இத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இல்லை. இது தேர்தலின் முன்பே உணரத்தக்க அளவில் வெளிப்படுத்தப்பட்டதொன்றாகவே இருந்தது. எடுத்துக்காட்டாக சனாதிபதி சந்திரிகாவே சமாதானத்திற்கு ஆதரவான சக்திகளுடன் தேர்தலில் கூட்டுவைத்துக் கொள்ளவில்லை.

சனாதிபதியின் கூட்டாளியான ஜே.வி.பி.யோ சமாதான முயற்சிகளுக்கு எப்பொழுதுமே எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளது. இதன் உச்சமாக புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஜே.வி.பி. முற்றாக எதிர்ப்பதோடு, தற்போதைய நிலையில் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை என்கிறது. இத்தகைய அரசியல் கூட்டாளிகளை வைத்துக் கொண்டு சனாதிபதி சந்திரிகாவால் எவ்வாறுசமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியும்?

அடுத்ததாக, சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க விரும்பும் எந்த சக்தியும் எதிர்த் தரப்புடன் நட்புறவுடன் பேசுவதற்கே விருப்பம் கொண்டிருக்கும் அவ்வாறு பேசப்படும்போதே பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றமும் காணப்படும்/காணப்பட முடியும். ஆனால், சனாதிபதி சந்திரிகாவோ, அவரது அரசாங்கமோ நட்புறவுச் சூழலுக்கு மாறாகப் பகையுணர்வையே வளர்க்க முற்படுகின்றது.

ஒரு புறத்தில் எதிர்த் தரப்பின் உள்வீட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றது. எடுத்துக்காட்டாக, கருணாவின் விவகாரத்தில் சனாதிபதி சந்திரிகா அரசாங்கம் நடந்து கொண்ட முறையைச் சுட்டிக்காட்டலாம். எதிர்த்தரப்பின் மத்தியில் பிளவுகளையும், மோதல்களையும் உருவாக்கி அவர்களைப் பலவீனப்படுத்துவதே இத்தகைய நடவடிக்கைகளின் நோக்கமாகும்.

இதனைத் தவிர அரச ஊடகங்களில் உண்மைக்கு மாறானதாகவும், மக்கள் மத்தியில் குழப்பங்களையும், பதற்றங்களையும் தோற்றுவிக்கும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் இத்தகைய பிரசாரங்கள் கடந்த காலங்களில் குறிப்பாக யுத்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதை ஏற்றுக்கொள்வதாயினும் சமாதான முயற்சிகளில் அரசு ஈடுபாடு காட்டிக் கொள்வதாகக் கூறும் இவ்வேளையில், இத்தகைய பிரசாரமானது பரஸ்பர நம்பிக்கையைத் தோற்றுவிக்க உதவப் போவதில்லை. மாறாக அவநம்பிக்கையும், முரண்பாட்டையுமே தோற்றுவிக்கவே உதவக்கூடும்.

இந்த வகையில், சந்திரிகா தலைமையிலான தற்போதைய அரசு இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தையூடாக அரசியற்தீர்வொன்றைக் காண்பதற்கான – சாத்தியப்பாடுகளைக் கொண்டதான அணுகுமுறை ஊடாகச் செல்வதாக இல்லை. மறுவளமாகக் கூறுவதானால், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும், அதில் முன்னேற்றம் காண்பதற்கும், விட்டுக் கொடுப்புக்களைச் செய்வதற்கும் தீர்வை எட்டுவதற்குமான சூழலை / நம்பகத்தன்மையைத் தோற்றுவிப்பதாக இல்லை. மாறாக முரண்பாடுகளையும், அவநம்பிக்கைகளையும் வளர்ப்பதாகவும், சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளைத் தோற்றுவிப்பதாகவுமே உள்ளது.

# எமது கோரிக்கைகளை உலகிற்கு வெளிப்படுத்த நாளை நடைபெறும் பேரணியில் பங்கேற்போம்

### பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை

எமது பாரம்பரிய பிரதேசத்திலே எமது பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்படுகின்ற இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையொன்றின் மூலமே எமது வளங்களை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என்பதை வலியுறுத்தி நாளை இடம் பெறும் பேரணியில் கலந்து கொள்வோம் என பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை கேட்டுள்ளது.

நாளைய பேரணி தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சிலதசாப்த காலமாக குறிப்பாக 1956,77,83,களின் தொடராக இருந்து இன்றுவரை தமிழினம் அகதி என்ற பேரில் தன் வீடு,வாசல்,சொத்து,சுகம் அனைத்தையும் இழந்து இன்றுவரை அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் எமக்கு வழங்கிக் கொண்டிருக்கும் நிவாரண உதவிகள் என்பனவற்றை நிறுத்தப் போவதாக எச்சரிக் கின்றனர். இந்த நேரத்தில்

எம்தமிழினமே நாம் ஒன்றுபட்டு எம் ஆர்ப்பாட்ட பேரணி மூலம் எமது பலத்தினை வெளி உலகிற்கு காட்டவேண்டும்.போர்நிறுத்த உடன் படிக் கையில் முக்கியமாக ஓர் பிரதான அம்சமாக உள்ளது இயல்பு வாழ் கையை எம்மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பது ஆனால் போர் நிறுத்த ஒப்பந்த நடவடிக்கை ஏற்பட்டு பல ஆண்டுகள் சென்றும்" இதுவரை உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை பற்றிய எந்தத் தீர்வும் சிறிலங்கா அரசினால் முன்வைக்கப்படவில்லை. தற்பொழுதும் இராணுவக் காவலரண்கள் சிறிய முகாம்கள் என இராணுவ இருப்பிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக புதிய அரசும் சந்திரிகாவும் தெரிவித்துவரும் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களும் கிழக்கில் எமது தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள்இரவு நேரத்தில் படுகொலை செய்யப்பட்டதும் தமிழீழக் கடற் பரப்பில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதும் கிழக்கில் தொடருகின்ற தமிழ் தேசியப் பற்றாளர்களின் படுகொலைகளும் மலையக மக்கள் மீது நடாத் தப்படும் ஆயுத வன்முறைகளும், அடாவடித்தனங்களும் எமது கடற் பரப்பில் மீன் பிடிக்கச்செல்லும் மீனவர்கள் தாக்குதலுக் குள்ளாவதும் கடலில் தூக்கி வீசப்படுவதும் காணாமற் போவதும் எமது வாழ்வியல் பொருளாதார உரிமைகளை மாறி மாறி வந்த சிறிலங்கா அரசானது அரசியல் சட்டங்களில் தொடர்ச்சியாக நிராகரித்து வருவதும் எமது கண்டனப்பேரணிக்கு காரணங்களாய் அமைந்துள்ளன.சுயநிர்ணய உரிமை கொண்ட நாம் சிங்களப்பேரினவாத அரசுக்கு அடிமைகளாக வாழத் தயாரில்லை வரலாற்றுத் தனித்துவமுடைய தமக்கெனப் பாரம்பரிய பிரதேசத் தினைக்கொண்ட தமிழ்த் தேசிய இனம் தமக்கான தலைமையினையும் தேர்தல் மூலம் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது.

எமது பாரம்பரிய பிரதேசத்திலே எமது பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்படுகின்ற இடைக்கால தன்னாட்சி அதிகார சபையொன்றின் மூலமாக மட்டும் தான் நாம் எமது வளங்களை மீளவும் கட்டியெழுப்பமுடியும். என்பதனை மீண்டும் ஒருமுறை வெளியுலகிற்கு வெளிப்படுத்த நாளை ஞாயிறு காலை கிளிநொச்சி மாநகரில் நடைபெறும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ள வேண்டும். என பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை கேட்டுக் கொள்கின்றது. (சோ.கு)

# வேலையற்ற பட்டதாரிகள் நியமனம் இரு ஆண்டுகளில் நிரந்தரமாக்கப்படும்

### நிதி அமைச்சர் சரத்அமுனுகம

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசதுறையினரால் வழங்கப்படும் வேலை வாய்ப்புக்கள் இரண்டாண்டு கால பயிற்சித்திட்டத்தின் பின்னர் நிரந்தரமாக்கப்படும் என நிதியமைச்சர் சரத்அமுனுகம கூறியுள்ளார்.நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில்; நியமனம் பெறும் பட்ட தாரிகளுக்கு பயிற்சிக் காலத்தின் போது ஆறாயிரம் ரூபா மாதாந்தப் படியாக வழங்கப்படும் எனவும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதத் திற்குள் நிறைவு பெறும் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்புக்களில் எவ் விதமான அரசியல் செல்வாக்கும் இடம்பெறாது என்றும் இந்த செயற்திட்டமானது வெளிப் படையான ஒன்றாகவே அமையும் எனவும் அமைச்சர் சரத் அமுனுகம மேலும் கூறியுள்ளார்.

# முன்னாள் ரெலிக்கொம் தலைவர் நேற்று பிணையில் விடுதலை

சிறிலங்கா கிரிக்கெட் மற்றும் ரெலிக்கொம் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான திலங் கசுமதிபால நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பாதாளக் குழுவைச் சேர்ந்த ஒருவருக்கு வெளிநாட்டிற்குச் செல்வதற்கு கடவுச்சீட்டுப் பெற்றுக் கொடுத்தார் என்கின்ற குற்றச் சாட்டில்இவர்கைது செய்யப்பட்டு கடந்த ஐந்து மாதங் களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரை மேல்முறையீட்டு நீதிமன்றம் 2இலட்சத்து50ஆயிரம் ரூபா பிணையிலும் மற்றும் மூன்று ஆட்பிணையிலும் விடுவித்துள்ளது.ஆனால் அவரது கடவுச்சீட்டை தடுத்துவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதேவேளை இவர் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை சி.ஐ.டியினர் முன் ஆஜராக வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது.குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஒருவருக்கு பிணை வழங்குவது சட்டத்திற்கு முரணானதென மேல்முறையீட்டு நீதிமன்ற நீதவான் சிறிபவன் தீர்ப்பை வழங்குகின்ற வேளை கூறியுள்ளார்.ஆனால் அநாவசியமாக திலங்க சுமதிபாலவை தடுத்து வைப்பது நியாயமற்றது என்பதால் நீதிமன்றம் இவரை விடுவிக்க தீர்மானித்துள்ளதென கூறியுள்ளார். இவர் தெரிவித்த கூற்றை நீதிபதிகள் குழுவின் தலைவர் நீதியரசர் அன்புசோமவன்சவும் நீதியரசர் காமினி அபேயரட்ணவும் ஏற்றுக் கொள்ளவதாக தெரிவித்துள்ளனர்.

# கொழும்பில் தீ விபத்தில் 10 வீடுகள் எரிந்து நாசம்

கொழும்பு கிராண்ட்பாஸ் வீதியில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதில் சுமார் 10 வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. நேற்று அதிகாலை வீடொன்றில் ஏற்பட்ட தீ பரவலாக சுமார் பத்துவீடுகளுக்குப் பரவியுள்ளது. தீய ணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு 10 நிமிடங்கள் எடுத்ததாக தீயணைப்புப் படைஅதிகாரியொருவர் கூறியுள்ளார் இதில் வீடுகளை இழந்தவர்களுக்கு தற்காலிகமாக இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதில் கொழும்பு மாநகரசபையும் ஏனைய தொண்டர் நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.




எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உலக அளவிலான மீன்பிடியில் 95 வீதமானவை - ஏறத்தாழ 80மில்லியன் தொன்கள் மீன்கள் கடற்கரையை அண்டிய பகுதிகளிலேயே பிடிக்கப்படுகின்றன.

# கொழும்பின் பாதுகாப்புக்குறித்து பாதுகாப்புச் சபை கூடி ஆராய்வு

கொழும்பிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்மற்றும் வர்த்தக மையங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்துவதென நேற்று 12.45இலிருந்து மாலைவரை நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதில் முப்படைத் தளபதிகளும், பாதுகாப்புச்சபைச் செயலாளர் சிறில்ஹேரத்தும் கலந்து கொண்டனர்.கொழும்பில் பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகமாக இருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதேவேளை நேற்று கொழும்பில் விடுதிப்பகுதிகளில் சிறிலங்காப் படையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருதல் என்ற பெயரில் இராணுவத்தினர் இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது. இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்றில்லாமல் கொழும்பில் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை என்கின்ற அடிப்படையில் இச்செயற்பாடுகள் இடம்பெறுவதாகக் கூறப்பட்டது. (32)

## அமைச்சர் ரட்ணசிறி அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லங்செற்இற்கும், சிறிலங்காவின் பொதுமக்கள் பாதுகாப்பு, சட்ட ஒழுங்குகள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிற்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவது பற்றியும் உரையாடியுள்ளனர்.

இதன்போது சிறிலங்காவிற்கு உதவிவழங்கும் அமெரிக்காவின் வேலைத்திட்டம் தொடர்ந்தும் அமுல் செய்யப்படுமெனவும் அவா கூறியுள்ளார்.

இதேவேளை சமாதான நடவடிக்கைகளுக்கு தமது அரசாங்கம் பூரண ஆதரவு வழங்குமெனவும் ஜெப்ரி லங்செற் தெரிவித்தார்.

## 16 ஆசிய நாடுகள் கலந்துகொண்ட கடற்பாதுகாப்புக் குறித்த மாநாடு

(கொழும்பு)

இலங்கை,இந்தியா உட்பட 16 ஆசிய நாடுகள் பங்குகொண்ட கடற்பாதுகாப்புக் குறித்த இரண்டு நாள் கூட்டம் நேற்று முடிவடைந்துள்ளது கொங்கோவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சில விடயங்கள் முக்கியமாக விவாதிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக கடல் வலய பாதுகாப்புத் தொடர்பாகக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட முடிவெடுத்தன. இதன் அடிப்படையில் தீவிரவாதிகளின் தாக்குதல்களைக் கடற்பிராந்தியத்தில் ஒன்றிணைத்து எதிர்ப்பதற்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.இக்கூட்டத்தில் 16 நாடுகளைச் சேர்ந்த 92 சிரேஷ்ட கடல் வலய பாதுகாப்புஅதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர் (32)

## புதிய தூதுவர் அடுத்த மாதம் வருவார்

சிறிலங்காவுக்கான உயர்ஸ்தானிகர் நிருபம்சென், ஐக்கிய நாடுகள் சபைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நியமனம் பெற்றுள்ளார். இதனடிப்படையில் விரைவில் அவர் தமது புதிய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள நிருபமாராவ் இன்னும் ஒரு மாதக்காலப்பகுதியில் இலங்கைக்கு வந்து தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. நிருபமாராவ் .இந்திய அரசாங்கப் பேச்சாளராகவும் பதவி வகித்தவராவார். (32)

## இடைக்காலத் தடை உத்தரவு அக்மீமன தேரருக்கு கையளிப்பு

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரருக்கான நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு தொடர்பான அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 7ஆம் திகதி இந்த உத்தரவு தொடர்பான அறிவித்தல் கல்கிஸை நீதிமன்றத்தின் ஊடாக விநியோகிக்கப்பட இருந்த போதும், தெஹிவளை அனாகரிக தர்மபால மாவத்தையில் உள்ள தயாரத்னவின் முகவரியில் அதனை விநியோகிக்க முடியவில்லை, இந்த நிலையில் தயாரத்ன தேரர் 8ஆம் திகதியன்றுதமது பதவிப் பிரமாணத்தைச் செய்து கொண்டார். இதன் பின்னர் இந்த விடயம் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து குறிப்பிட்ட உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்ற அதிகாரிகள் தயாரத்ன தேரரிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சுகாதார ஊழியர் வேலைநிறுத்தம்செய்வர்

(கொழும்பு)

சுகாதார சேவைஊழியர்களின் சம்பளப்பிரச்சினைகள் உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இம்மாதம் 22ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக சுகாதார ஊழியர் சங்கம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது. சமயா, சமய ஊழியர்களை நிரந்தரமாக்குதல் வேண்டும். அவர்களுக்கு 1997ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி சம்பள உயர்வுகள் வழங்கவேண்டும் என சுகாதார ஊழியர்சங்கம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

## மலையகத் தொழிற்சங்கங்கள் செய்த வேதன ஒப்பந்தம் முடிவடைகிறது

(கொழும்பு)

பெருந்தோட்ட நிறுவனங்களுடன் மலையகத்தின் தொழிற்சங்கங்கள் செய்து கொண்ட வேதன ஒப்பந்தம் எதிர்வரும் 30 ஆம் திகதி முடிவடைகிறது இந்த நிலையில் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக 200 ரூபா வழங்கப்படவேண்டும் என இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் டி. வி சென்னன் கேட்டுள்ளார். எனவே இவ்வாறான உடன்பாடு ஒன்றுக்காக தோட்ட நிறுவனங்கள் மலையகத்தின் அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேச வேண்டும்எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.ஏற்கனவே சில தொழிற்சங்கங்கள் மாத்திரமே தோட்ட தொழிலாளர்களின் வேதன ஒப்பந்தத்தில் செல்வாக்குச் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார். (32)

### இந்திய...

நட்வர்சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதேவேளை, லண்டனில் தற்போது தங்கி இருக்கும் சிறிலங்கா சனாதிபதியைப் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைப்பு விவகார அமைச்சர் சக்ஸ்றோ சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து ஜக்ஸ்றோவிடம் சனாதிபதி எடுத்துக் கூறியிருப்பதாக சிறிலங்காவின் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### இந்தியா....

இருந்து இலங்கை திரும்பிய அகதிகள் சிலர் இந்தத் தகவலை கூறியிருப்பதாக அரச ஊடகம்ஒன்று தெரிவிக்கின்றது.

நேற்று முன்தினம் கடற்படைப் படகுகள் இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

### சர்வதேச...

அதிகாரசபை மூலமே எமது வளங்களை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்பதை மீண்டும் உலகிற்கு வெளிப்படுத்தவும், இப் பேரணி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

### இரு...

இதேவேளை சிறுமிகளின் அழுகுரல் கேட்டு அவ்விடத்திற்கு விரைந்த ஊரவர்கள் இரண்டு சிறுமிகளையும் அம்பாறை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

### நோர்வே....

டுகிறது. இதேவேளை ஹெல்கேசன் நேற்றுமுன்தினம் நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சூல்ஹெய்ம் லண்டனில் அரசியல் ஆலோசகர்அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியமை தெரிந்ததே. (32)

-சம்பூரிலிருந்து கிளிநொச்சிவந்த-

## 82 போராளிகளை இராணுவம் தடுத்து திருப்பி அனுப்பியது

சம்பூரிலிருந்து கிளிநொச்சி வருவதற்கான கட்டைபறிச்சான் ஊடாக வந்த82போராளிகளை மீண்டும் படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இவர்கள் விளையாட்டுப் போட்டி ஒன்றிற்கு வருவதற்காக வந்ததாகவும் இவர்களிடம் சிறிலங்காவின்அடையாள அட்டை எதுவும் இல்லாமல் புலிகள் கொடுத்த அடையாள அட்டை மட்டும் இருந்ததாகவும் எனவே தாம் அவர்களைத் திருப்பி அனுப்பியதாகவும் இராணுவத்தினர் கூறியுள்ளனர். (32)

## லயனல் பலகல்லவுக்கு சேவைநீடிப்பு? கொட்டேகொடவைப் பலர் விரும்பவில்லை

சிறிலங்காவின் புதியஇராணுவத் தளபதியாக சாந்தகொட்டே கொட நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அரசியல் அழுத்தங்களினால் மீண்டும் லயனல் பலகல்லவின் பதவி ஆறுமாதங்களுக்கு நீடிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவத் தளபதியாக சாந்தகொட்டேகொட நியமிக்கப்படுவதை பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதேபோன்று நேற்று ஜே.வி.பியும் அரசின் முக்கிய அமைச்சர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே மீண்டும் ஆறு மாதங்களுக்கு தற்போது இராணுவத் தளபதியாகவுள்ள லயனல் பலகல்லவின் பதவிக் காலம் நீடிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (32)

## ஆட்சியை உடன் கைப்பற்ற ஐ.தே.கட்சிக்கு ஆலோசனை

வர்த்தக சமூகமும். ஐ.தே.கட்சியின்ஆலோசகர்களும் தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றுமாறு கூறியுள்ளனர்.

ஐ.தே.க. சனவரி மாதம் வரை ஆட்சியைக் கைப்பற்ற மாட்டோமெனக்கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான காரணம் என்னவெனில் ஆறுமாத இடைவெளி இருக்குமாயின் சனாதிபதியும், ஜே.வி.பி.யும் இணைந்து மக்களைத் தம்வசப்படுத்தி ஐ.தே.க ஆட்சியமைக்கமுடியாத நிலைமை ஏற்படுத்திவிடுவர். எனவே ஐ.தே. கட்சி உடனடியாகத் தமிழரசுக் கட்சி, ஹெல உறுமயவின் ஆதரவுடன் ஆட்சியைஅமைக்க வேண்டுமெனக் கூறியுள்ளனர். (32)

## குவைத்திலிருந்து 61 பணிப்பெண்கள் திருப்பி அழைக்கப்பட்டனர்

(கொழும்பு)

குவைத்தில் நிர்க்கதியான 61 இலங்கைப் பெண்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஏற்பாட்டின் பேரில் இவர்கள் நாட்டுக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை மேலும் 300 க்கும் மேற்பட்ட பணிப்பெண்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதற்காகக் குவைத்தின் சிறிலங்காத் தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இவர்கள் தமது வேலைக்கேற்ப சம்பளம் இன்மை மற்றும் துன்புறுத்தல் காரணமாக தூதரகத்திற்குச் சென்று தஞ்சமடைவதாகத் தெரியவருகிறது. (32)

-கிளி. அரசசார்பற்ற நிறுவனத்தில்-

## பெற்றோல் திருடிக்கொண்டு வந்தவர் காவல் துறையிடம் அகப்பட்டார்

கிளிநொச்சியில் 44லீற்றர் பெற்றோல் திருடிக்கொண்டுவந்தவர் தமிழீழ காவல்துறையினரிடம் பிடிபட்டார்.நேற்று இரவு 7.00மணிக்கு கிளிநொச்சி கணேசபுரத்தில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனமொன்றிலிருந்து கொள்கலன்களில் நிரப்பிவைக்கப்பட்டிருந்த 44லீற்றர் பெற்றோலை எடுத்துக்கொண்டு வீதியைக் கடக்க முற்பட்ட சந்தேகநபரைக் கடமையில் நின்ற காவல்துறையினர் மடக்கிப்பிடித்துள்ளனர். (தீ)

## பௌத்த பிக்குக்ளைத் தாக்கியமை குறித்து சனாதிபதி, பிரதமர் அனுதாபம் தெரிவிக்க வேண்டும்

### ஜாதிகஹெல உறுமய வலியுறுத்து

பாராளுமன்றத்தில் பிக்குகளைத்தாக்கியமை தொடர்பாக சனாதிபதியும் பிரதமரும் அனுதாபம் தெரிவித்துஅறிக்கை வெளியிட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.கட்சிசார்பில் எல்லாவலமேதானந்த தேரர் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுங்கள். பாராளுமன்றத்தில் பிக்குகளைத் தாக்கியது போன்ற சம்பவங்களில் ஈடுபடமாட்டோம் என சனாதிபதி ஜாதிக ஹெல உறுமயவிற்கு உறுதியளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

கட்டாக்காலி கால்நடைகள்

ஏல விற்பனை

து.பொ.மே.நிறுவன கிளி.மாவட்ட பரந்தன் பிரதேச செயலகத்தினால் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ள கால்நடைகள் விபரம் ஊரியான் க.அமைப்பினுடையது. M.N மைல எருது திருநூற்றுக் குறி முரசுமோட்டைக.அமைப்பினுடையது. S.J வெள்ளை எருது T.A கறுப்பு நாகு (பசுக்கன்று) ஆகியன 25.06.2004 திகதிக்கிடையில் உரிமையாளர் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளத் தவறின் 28.06.2004 திகதி அப் பகுதி கமக்கார அமைப்பினால் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனைத் தெருவித்துக் கொள்கிறோம். (4717)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.